
# நான்

உளவியல் மஞ்சரி



றுமலர்ச்சி

ங்குனி — சித்திரை

தழ் - 15 மலர் - 2

1989

விலை: 4/-

# தோலகட்டி நெல்லிரசம்

எமது தயாரிப்பான
தோலகட்டி நெல்லிரசம்
இப்போது புதிய வர்ண லேபலுடனும்
சிவப்பு நிற மூடியில்
வெள்ளை எழுத்தில்
**Tholagatty Products**
என்ற எழுத்துக்கள்
பொறிக்கப்பட்டு வெளிவந்துள்ளது.
எனவே இனியும்
போலிகளைக்கண்டு ஏமாறவேண்டாம்.

*இயக்குனர்:*

செபமாலைதாசர் ஆச்சிரமம்,
தோலகட்டி,
வசாவிளான்.

அருள் ஆச்சிரமம்,
5, ரெம்பிள் ரோட்,
யாழ்ப்பாணம்.

மறுமலர்ச்சி

பங்குனி
1989
சித்திரை

# மனிதன் மாறவில்லை!

பறவையைக் கண்டான்
விமானம் படைத்தான்
பாயும் மீனில்
படகினைக் கண்டான்
எதிரொலி கேட்டான்
வானொலி படைத்தான்
சந்திரனைத் தொட்டான்
சரித்திரம் படைத்தான்
இத்தனை ஆற்றல்களின் பின்னரும்
இன்னும் மனிதன் மாறவில்லை
அவனது சுயநலப் போக்கிலிருந்து
இன்னும் அவன் விடுபடவில்லை.

தனக்காகவே வாழ்கின்றான்
தன்னைத் துன்புறுத்துவோரைத் துன்புறுத்துகின்றான்
தன்னை வாழ்த்துவோரைப் போற்றுகின்றான்
பாரம் பரியமாக வாழ்ந்து விட்ட பாதையிலேயே
பயணத்தைத் தொடர்கின்றான்
புதுமை, மாற்றம், மறுமலர்ச்சி என்று பேசுகின்றான்

ஆனால் வாழ்க்கையிலோ
பழையனவற்றையே,
பலருக்கு அழிவாயிருப்பனவற்றையே
கட்டிப் பிடித்துக் கொண்டு
கண்ணீர் வடிக்கின்றான்
கண்ணீர் வடிக்க வைக்கின்றான்
வறுமையில் வாழுவோருக்கு
வாழும் வழிகளைக் காட்ட மறுக்கின்றான்.

மனிதன் மாறவேண்டும்
அவனது சிந்தனையில் மாற்றம் வேண்டும்.
அவன்,

மனிதனாக,
மனிதர்களை வாழவைப்பவனாக
மனித சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை
நிலைநாட்டுபவனாக மாறவேண்டும்.

—ஆசிரியர்

உள்ளே...


கருத்துக் குவியல்

வாழ்த்துடிக்கிறுள் (சிறுகதை)

மரணிக்காத மனிதத்துவம்
— சாவி

சமுதாயம் தேடும் சமத்துவம்
— தமிழ்நேசன்

முதியோருடன்
சில மணி நேரங்கள்
— றெஞல்ட், அந்தோனிமுத்து

உள் மனதில் காயங்கள்
— வீரமகள்

ஆணினமே
புரிந்து கொள்ளட்டும்
— N. விமலா

உளவியல் தேர்வு
— நீக்லஸ் அ. ம. தி.

அழகியலின் உளவியல்
— கலாநிதி. சோ. கிருஷ்ணராஜா


---

அடுத்து வெளிவருகிறது:

"ஆற்றல்"

உங்கள் ஆக்கங்களை உடன் எழுதி அனுப்புங்கள்.


ஆசிரியர் :
வின்சன்ற் பற்றிக் O. M. I. B. A.

இணை ஆசிரியர்:
S. டேமியன் O. M. I., M. A.

துணை ஆசிரியர் :
ஜோசப் பாலா
ராஜன் மங்களா
றெபேட்
வினிபிரட்

தொடர்பு:
றெஞல்ட்
செபநேசரத்தினம்

அமைப்பு:
அந்தோனிமுத்து
அல்றின்
ஜெறோம்
S. நியூமன்

விநியோகம் :
விமலருஜன்
ஸ்ரனி

அட்டைப்படம் :
மோகன்

பொருளாளர் :
ஜெயசிங்கம் O. M. I.

ஆலோசகர் :
B. இராயப்பு O. M. I., S. T. D


---


தொடர்பிற்கு: "நான்" ஆசிரியர்,
வசந்தகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.



தனிப்பிரதி: 4—00 ஆண்டு சந்தா: 25—00



# இணை ஆசிரியரின் இலண்டன் பயணம்

[அண்மையில் இலண்டன் சென்று உளவியல் ரீதியாக பாதிப்புள்ளவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான பயிற்சியில் பங்கெடுத்துக்கொண்டு தாயகம் திரும்பி வந்த ''நான்'' இணை ஆசிரியர் S. டேமியன் O. M. I., M. A. அடிகளுடன் செவ்வி கண்டவர்: திருவாளர். M. S. நாயகம் ]

கே. அண்மையிலே தாங்கள் இங்கிலாந்துக்கு மேற்கொண்ட குறுகிய கால விஜயம் எதற்காக என்று கூறுவீர்களா?

ப. இன்று உலகின் பல்வேறு நாடுகளில் சித்திரவதைக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் குறிப்பாக உளவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான பயிற்சிகள் டென்மார்க், மொன்றியோல், இங்கிலாந்து ஆகிய இடங்களில் வழங்கப்படுகின்றன. நான் இங்கிலாந்திலுள்ள Medical Foundation நிலையத்தினர் கொடுக்கும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்காகவே சென்றிருந்தேன்.

கே. இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிட்டியது?

ப. நீங்கள் அறிந்திருப்பீர்கள் யாழ்ப்பாணத்தில் 1-ம் குறுக்குத் தெருவில் சாந்தீகம் உளவள ஆலோசனை நிலையத்தில் (Association for Health and Councellers) சித்திரவதைகளுக்கு உள்ளாகிப் பாதிப்படைந்தவர்களுக்கு மட்டுமல்ல பொதுவாக எல்லா விதமான உளப் பாதிப்புகள் உள்ளானவர்களுக்கும் உளவளத் துணைப்பணியை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் காரணத்தால் லண்டனில் உள்ள இந்த நிலையத்தினருக்கும் எனக்கும் தொடர்புகள் ஏற்பட

வாய்ப்புக் கிட்டியது. அந்த நிலையத்தின் இரண்டு பிரதிநிதிகள் இங்கு வந்திருந்தனர். ஏற்கனவே நான் படித்து அறிந்துகொண்டதின்படி இத்தகைய உளப்பாதிப்புற்றவர்களுக்கு செய்துவரும் பணியினைக் கண்டு மகிழ்ந்த அவர்கள் இத் துறையில் நான் முழுமையான பயிற்சியைப் பெறுதல் வேண்டும் என்று விரும்பி லண்டனில் உள்ள தமது Medical Foundation நிலையத்தில் படிப்பதற்காக இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

**கே. இது எவ்வளவு காலப் பயிற்சி?**

ப. சுமார் ஒன்றரை மாதங்கள்.

**கே. இப் பயிற்சி பெறுவதற்காக இலங்கையிலிருந்து தாங்கள் மட்டும்தான் சென்றிருந்தீர்களா?**

ப. இலங்கையன் நான் ஒருவன் தான். ஆனால் எம்மிடையே ஏற்கனவே இங்கு பணியாற்றிக்கொண்டிருந்த பிரித்தானிய அம்மையார் அவர்களும் அதில் கலந்துகொண்டார்கள்.

**கே. வேறு நாடுகளில் இருந்தும் உங்களைப் போன்று யாராவது பயிற்சி பெற வந்திருந்தார்களா?**

ப. அப்படி ஒருவரும் இல்லை.

**கே. இந்த நிலையம் யாரால் அங்கு நடத்தப்படுகிறது?**

ப. திருமதி ஹெலன் பம்பர் (Helan Bomber) எனப்படும் ஒரு அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. நல்ல பண்பும், சமூகசேவை நோக்கும் உள்ள பெண்மணியாவார். இந்த நிலையத்தில் உளவியல் துறையில் மட்டுமன்று ஒரு உள நோயாளிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய எல்லா விதமான பாதிப்புகளுக்கும் சிகிச்சை தரக்கூடிய நிபுணர்கள் கடமையாற்றுகின்றனர்கள்.

**கே. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சிகள் வெறுமனே உரைகளாக மட்டும் இருந்தனவா? அல்லது செயல் முறையும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டனவா?**

ப. பெரும்பாலும் எமக்குச் செயல் முறைப் பயிற்சிகளே வழங்கப்பட்டன. இடைக்கிடையே உரைகளும் இடம்பெற்றன. அவற்றின் மூலம் நாம் இங்கு எமது நிலையத்தின் மூலம் செய்துகொண்டிருக்கும் சேவை போன்று உகண்டா, தென் ஆபிக்கா போன்ற நாடுகளில் சேவைசெய்யும் நிலையங்களின் பிரதிநிதிகளின் மூலம் எமக்குள்ள அதே விதமான பிரச்சனைகளும் தாக்கங்களுமே அங்குள்ளவர்களுக்கும் உள்ளன என்பதை உணரக்கூடியதாகவிருந்தது.

**கே. செயன்முறைப் பயிற்சி பெற்றேன் என்கின்றீர்கள். அப்படியானால் இப்பயிற்சியைப் பெறுவதற்கு உங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த உளத்தாக்கத்துக்கு உள்ளானவரைப் பற்றியும் அவர் பின்னணியைப்பற்றியும் கூற முடியுமா?**

ப. எனக்கு வேற்று நாட்டில் கவர்னராக இருந்த ஒருவரே கொடுக்கப்பட்டார். ஆரம்பத்தில் அவர் என்னோடு பேசுவதற்கே தயங்கினர். காரணம் நான் எந்த நாட்டினதும் உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவனக இருப்பேனே என்ற அச்சம் இருந்தது. இதற்காக நான் முன் ஆயத்தம் செய்து போதிய விளக்கங்கள் கொடுக்க வேண்டியிருந்தது. தான் கைது செய்யப்பட்டது தொடர்ந்து 8 வருடங்கள் சூரிய ஒளியோ காற்ருே இல்லாத நான்கடி அறையில்தான் அடைத்து வைக்கப்பட்டிருந்தது பற்றியும், உலகத்திலே என்ன நடக்கின்றது, தனது குடும்பத்தவர்களுக்கு என்ன நடக்கிறது. அவர்கள் நிலை என்ன என்பது போன்ற செய்திகளை கூட தான் பெற முடியாமல் இருந்தது பற்றி எல்லாம் விளக்கினர்.

கே. அவருக்கு தாங்கள் என்ன விதமான சிகிச்சையை மேற்கொண்டீர்கள்?

ப. நான் அவருக்குச் சிகிச்சை செய்யவில்லை. அவருக்கு என்ன விதமான சிசிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அவதானிக்கும் வாய்ப்பே எனக்கு வழங்கப்பட்டிருந்தது. நான் ஏற்கனவே கூறியது போன்று அவரைப் பற்றிய விபரங்கள் முழுமையாக அறியப்பட்டதன் பின்னர் – அதாவது எந்த விதமான தாக்கத்துக்கு உள்ளானர் என்ற விபரங்களைத் தெரிந்துகொண்டதன் பின்னர் அவர் அதற்குரிய பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். அவரைப் பொறுத்த வரையில் உடல் ரீதியான தாக்கத்துக்கே ஆளாகியிருந்தார்.

கே. எங்களுடைய நாட்டிலும் சித்திரவதைகள் இடம் பெறுவதாக அறிகிருேம். பிற நாடுகளிலும் என்ன விதமான சித்திரவதைகள் இடம் பெற்றுள்ளன என்பதை அங்கு வந்தவர்கள் மூலம் அறியக் கூடிய வாய்ப்புகள் கிட்டியதா?

ப. சித்திரவதை செய்யப்படுவதன் நோக்கமே ஒரு மனிதனுடைய ஆளுமை முதலில் இல்லாமல் செய்வதே. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு சித்திரவதைகள் நடந்து வருவதையே அங்கம் அங்கமாக, மூட்டுமூட்டாக ஏதோ ஒரு விதத்தில் அவர்களை உபாதைப்படுத்தி – சுய நினைவு இழக்கும் வரைக்கும் வதைத்த பின்னர் அறிவு வரச்செய்து – அறிவு வந்ததும் தொடந்து அறிவு கெடும் வரை வதைத்துக் கொடுமைகள் செய்திருக்கிருர்கள்.

கே, நல்லது, தாங்கள் அங்கு பெற்று வந்த அனுபவங்களைக் கொண்டு இங்கு என்ன செய்வதாகத் திட்டம் போட்டுள்ளீர்கள்?

ப. இங்கும் கடந்த காலங்களில் இடம்பெற்ற நடவடிக்கைகளால் குறிப்பாக பூசாமுகாம் போன்ற இடங்களில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த வதை அனுபவங்களைப்

5 நான்

பெற்று உளப்பாதிப்பு அடைந்த வர்களாக இருக்கின்றார்கள். அவர் களை நாம் ஏற்று, அவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையூட்டக் கூடிய விதத்தில் அவர்களை நிறை வுள்ள ஆரோக்கியமான முழு மனிதர்களாய் வாழத் துணை செய்ய எம்மால் இயன்ற பணிகளைச் செய்ய வுள்ளோம். ஏற்கனவே எமது நிலை யத்தில் பயிற்சிபெற்ற வைத்தியத் துறை மாணவர் இருக்கின்றார்கள். அவர்களின் துணையோடு நாம் ஒரு குழுவாக நான் பெற்றுவந்த அனு பவங்களோடு செயல்படலாம் என்று நினைக்கின்றேன். இதனை புனருத்தாரண வாழ்வு நிலையத்தின் அனுசரணையோடு மன்னார், கிளி நொச்சி, வவுனியா போன்ற இடங் களுக்குச் சென்று முதலில் எம்மால் இயன்றதைச் செய்யவுள்ளோம்.

கே. இத்தகைய பணியானது எமது நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு புதிய முயற்சி. எனவே தாங்கள் ஒருவராகவோ அல் லது தனியாகவோ இந்தக் குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று சேவை செய்வது வர வேற்க வேண்டியதுதான், ஆனால் இத்தகைய உளவளத் துணைப் பணியானது ஒரு குறிப் பிட்ட தினங்களில் செய்து முடித்துவிடக் கூடிய பணி யன்று. சிலபேருக்கு மாதங் கள், வருடங்கள் கூடத் தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டி இருக்கும். இது உங் களால் எப்படிச் சாத்திய மாகும்?

ப. இது முக்கியமான கேள்வி அதற்காகத்தான் இத்தகைய மாவட்டங்களில் இருந்து இப் பணிக்குத் தகுதி வாய்ந்தவர்களை அழைத்து அவர்களுக்குப் பயிற்சி யளித்து அவர்கள் நிரந்தரமாக அவ்வப்பகுதிகளில் தொடர்ந்து பணி செய்பவர்களாகவும் நாம் அவர்களுக்குத் துணை செய்பவர் களாகவும் இயங்கத் திட்டமிட்டுள் ளோம்.

கே. தாங்கள் லண்டன் சென்று பெற்று வந்தது போன்று பயிற்சிகளை இங்கிருந்து வேறு யாரும் சென்று பெற வாய்ப்பு கள் இருக்கின்றனவா?

ப, இத்துறையில் மேலும் பயிற்சி பெற பலர் தேவை. அதன் காரணமாக நாம் தகுதி வாய்ந்தவர்களை அங்கு சென்று பயிற்சி பெற்றுவர முயற்சிகள் எடுப்போம். அநேகமாக அந்தப் வாய்ப்புகள் உண்டு.

---


"நான்" தொடர்ந்து கிடைக்க வேண்டுமா?

சந்தாவை புதுப்பியுங்கள்

வருட சந்தா:- 25—00



இலங்கை மன்றக் கல்லூரியில்
நடைபெற்ற
''அபிவிருத்தியில் தொடர்புச்
சாதனங்களின் பங்களிப்பு''
என்னும் கருத்தரங்கில்
குவிந்த கருத்துக்கள்

## சமுதாய அபிவிருத்தியில் சஞ்சிகைகளின் பங்கு

R. தெய்வேந்திரராஜா, — மட்டுநகர்.

நாம் வாழுகின்ற சமுதாயத்தின் மத்தியிலே பல சஞ்சிகைகளைக் கேள்விப்படுகிறோம், பலவற்றைப் பார்க்கின்றோம். சிலவற்றை ரசிக்கின்றோம். ஆனால் இவைகளில் எத்தனை உண்மையில் வாழும் எம் சமுதாயத்திற்கு உரமிடுகிறது, அல்லது எமது உணர்வுகளுக்கு வடிகால்களாகின்றது? என்றால், சிந்திக்க வேண்டியது.

இன்று இறக்குமதியாகும் வெளிநாட்டுச் சஞ்சிகைகள் எமது சமூக, கலாச்சார அபிவிருத்திக்குப் பங்களிக்கவில்லை. ஏனென்றால் வேறுபட்ட சமூகப் பின்னணியிலும், மாறுபட்ட கலை கலாச்சார உயிரோட்டத்திலும் உருவாகும் ஆக்கங்களும், செய்திகளும் வித்தியாசமான சூழலில் வாழும் எமக்கு பொழுது போக்காக இருக்கலாம். ஆனால் மறுமலர்ச்சியைக் கொடுக்கிறதா? இறக்குமதியாகும் ஆங்கில சஞ்சிகைகள் நல்ல அறிவூட்டலையும், உலகளாவிய ரீதியில் பரந்த அறிவையும், உலகம் மாறுகின்றது, வளர்கின்றது என்ற உணர்வையும் கொடுப்பதென்பது உண்மைதான். இருப்பினும் எமது தமிழ்ச் சஞ்சிகைகளின் பங்கு ஆய்வு செய்யப்பட வேண்டியதொன்று!

இலக்கிய சஞ்சிகையாகவும், பொழுதுபோக்கு விடயங்களை உள்ளடக்கிய சஞ்சிகையாகவும், அறிவூட்டும் சஞ்சிகையாகவும், மத விழுமியங்களை விதைப்பனவாகவும் பல சஞ்சிகைகள் வெளிவருவது உண்மையே. ஆனால் கடந்த காலத்தில் இவைகள் சமுதாயம் வளரவேண்டும் என்று விரும்பி வெளிவந்த வேளையிலும், முழு

வினைத்திறனோடு இவைகள் தமது பங்கைச் செய்யவில்லை யென்பதை யும் உணரமுடிகிறது.

சாதி, மத பிரிவினையைப்பற்றிய அம்சங்கள், செய்திகள், கதை கள் வெளிவந்தபோதிலும் மக்கள் மத்தியில் இப்பிரிவினை தாக்கம் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப் படவில்லை. அல்லது மக்கள் உணர வைக்கப்படவில்லை.

சமத்துவத்தைப்பற்றிப் பலகால மாகப் பேசுகிறோம். ஆனல் எவ் வளவு தூரம் யதார்த்தமாக, வாழ வைக்கப்படுவதற்கு சஞ்சிகைகள் பங்கு கொடுத்தன. அடிமட்டத்தி லாவது சரி அவர்கள் மட்டத்தி லாவது சரி இது நல் உருவம்பெற வழி செய்யப்படவில்லை என்பதும் ஒரு அவதானிப்பு எனலாம்.

ஜெயகாந்தன் ''வாழ்க்கையில் எல்லாம் இருக்கிறது. ஆனல் வாழ்க்கைதான் இல்லை'' என்று எழுதினர் அதுபோல் மனிதவாழ் விலும் நடைமுறைச் சாத்தியமான வாழ்க்கைத் தத்துவங்கள் கொடுக் கப்படவில்லை. மாருக மக்களுக்கும் ஒரு கற்பனை.

உலகைப் படைத்து, ஒரு போலி வாழ்க்கை வாழத்தான் வழிவகுத் துள்ளது. மிகைப்படுத்தப்பட்டு, யாவும் கற்பனை என்ற பெயர்ப் பலகையின் பின்னல் உருவாக்கப் பட்ட உருவங்கள் மக்களுக்கு மாதிரி கையான போது (Modils) அதை வாழ அவர்கள் முற்பட்டபொழுது ஏற்பட்ட தோல்விகள் எத்தனை.

காதலால் உலகமே நிறைந்திருக் கிறது என்று கற்பனைக் கதையின் கதாபாத்திரமொன்று வாழத் துடித்து வீதி வழிகூடத் தெரியா மல் திரியும் பல சோக உருவங்கள் இவைகளுக்குச் சாட்சி.

இனச்சார்பற்ற, நடுநிலைத் தன் மையினை வெளிக்காட்டவில்லை மக்களுக்கு ஊட்டவில்லை. அதை விட செய்திகளாலும், கதைகளா லும் இனங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தி அதிக பங்கெடுத் தன எனலாம். இல்லாவிடில் இந் தளவுக்கு இனப்பிரச்சனை சகல மட்டத்திலும் தீவிரமடைந்திருக்க முடியாது.

நீதியைப்பற்றியும், மனச்சாட்சி யைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கவில்லை. இதுதான் நீதி. இப்படிச் செய்தால் அநீதி என்று நல்ல உருவகங்கள் மூலம் இவ் வுணர்வு வெளிக்காட்டப்படவில்லை.

எனவே இதுபோன்ற குறைவான பங்களிப்புகளினல் (சமுதாயத்தில்) ஏற்பட்ட விளைவினைப் பார்க்கு மிடத்து பல உண்மைகளை ஜீரணிக்க வேண்டியுள்ளது. இவ் நல் லுணர்வுகள் ஊட்டப்படாததன் விளைவாக எந்த ஒரு பிரச்சினைக்கும், விரைவான அணுகுமுறை பலாத் காரம் தான் என்று எண்ணவைத்தது மன்றி அதை உறுதிப்படுத்தவும் முனைந்தது இச் சமுதாயம். ஆரோக்கியமான அப்பன் – மகன், ஆசிரியர் – மாணவன் என்ற உறவு முறைகள் முரண்பாடான, கண் ணியமற்ற உறவுகளாக உருக் குலைந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

சமுதாயம் நல்லுணர்வைப் பெறாத, புரிந்து கொள்ளாத இந் நிலையில் நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழலும் படிப்படியாக புற்றுநோய் வடிவமெடுத்து ஊடுருவின. இதன் விளைவு சுத்தமில்லாத ஒழுங்கற்ற அரசியலை சமுதாயம் (வயிறு தன் நிலை இழந்துவிடும் என்று தெரிந் தும் வேறு வழியின்றி) விழுங்க வேண்டியதாயிற்று.

சமத்துவம், நீதி என்பது பலாத் காரத்தின் மூலம் சீராக்கப்பட, நிலைநிறுத்தப்பட எடுத்த முயற்சி களும், அணுகுமுறைகளும் அழ கான எம் சமுதாயக் கட்டமைப் பினை பலாத்கார மாற்றத்தினை ஏற்படுத்தி அலங்கோலமான தன் மைக்கு வழிவகுத்தன எனலாம்.

எனவே எதிர்காலத்தில் சஞ்சி கைகள் எப்படி சமுதாயத்திற்குச் சேவை செய்யலாம். அதன் மறு மலர்ச்சியில் பங்கெடுக்கலாம் என் பதையிட்டுச் சிந்திக்கும் வேளை, பல சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

சிந்தனையிலும், செயலிலும், அறிவிலும் ஏனைய துறைகளிலும் சமத்துவமான வாழ்க்கை நிலை தேவைதான். இதை பலாத்கார மில்லலாத சாத்வீக முறையில் ஏற் படும் என்ற நம்பிக்கையுணர்வை யும் சிந்தனையையும் தூண்டுதல் சிறந்ததொரு முறையாகும்.

இன்றைய இளைஞர் சமுதாயம் பெரியவர், ஆசிரியர், சமுதாயம் என்ற கட்டமைப்பினுள் அடங்கி னாலும் 'கண்ணியம்' என்ற உயர் விழுமியம் வாழப்படாத வகை யில் மனிதப் பண்புகள், விழுமியங் கள் வாழ்க்கைக்கு தேவை. அது தான் நல்வழி என்ற உணர்வினை ஊட்டவேண்டும். இது உளவியல் ஆய்வு அடிப்படையில் தோன்றும் ஒரு அணுகுமுறையைப் பின்பற்று கின்றபோது அவர்களிடையே தோன்றியுள்ள விரக்தி மனப்பான் மையைப் போக்க வழியேற்படும்.

சமயங்களின் அத்திவாரம் ஒன்று தான். அன்பிலே எழுதப்பட்ட சம யங்கள், மனித மாண்பினை மதிக்க நல்வழிகளைக் கூறிநிற்கும் என்ற உணர்வை ஊட்டி அனைத்து மதங்க ளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாத தென்பதோடு மேலும் ஆளமாக ஒவ் வொருவரின் சிந்தனையைத் தூண்டி இறை விசுவாசத்தில் இன்னும் தம்மை ஆழமாக்க வழி ஏற்படும்.

இவைகளை விட வளர்ந்திருக்கும் சமுதாயம் பலாத்காரத்திலும், முரண்பட்ட அணுகு முறைகளிலும், பாதகமான வாழ்க்கை விழுமியங் களிலும் ஊறிவிட்ட இவ்வேளை உடனடியாக ஒரு சமுதாய சீர்திருத் தமும், மறுமலர்ச்சியும் ஏற்படும் என்பதும், ஏற்படுத்தலாம் என்ப தும் (சிலர் சொல்வதுபோல்) பாதிக் கனவாகலாம். எனவே இத்தோடு கூட வளர இருக்கும் எமது சிறுவர் சமுதாயத்தினைக் கருத்தில் கொண்டு திட்டமிட்டு அவர்களின் நல்வாழ்விற்கு பங் களிப்போமாகில் அது நலமளிக்கும்.

வேறுபட்டிருக்கும் வாழ்க்கைச் சூழலையும், சமுதாயக் கட்டமைப்பினையும் "பார்வையாளர்களாக" இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் எமது சிறுவர் சமுதாயத்தின் சிந்தனைகளை நேரிய வழியில் மாற்றுவது எம் கடமை. நல்ல பண்புகளையும், தத்துவங்களையும் வெளிப்படுத்தும் ஆக்கங்கள், நிகழ்ச்சிகள் என்பனவற்றின் மூலமும் இதுதான் வாழும் முறை என்ற கோட்பாட்டினையும் அவ்வப்போது பலவழிகளிலும் பல முறை எடுத்தியம்பும் போதும்தான் அதனை ஊட்டும் போது தான் நற்சிந்தனையுள்ள, நல்ல எதிர் காலத்தை நோக்கி வீறு நடை போடக்கூடிய ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம்.

எனவே, கடந்ததை விடுத்து வளரும் காலத்தில் சஞ்சிகைகள் ஆற்ற வேண்டிய பணியினை உணர்ந்து செயற்படுவோமாக.

## "வெகுசன தொடர்பும் மனித விருத்தியும்"

திருமதி. யோகா பாலச்சந்திரன்
(உதவி இயக்குநர், தகவல், தொடர்பு கொள்ளல்,
இலங்கை குடும்பத்திட்டச் சங்கம்.)

வாரந்தோறும் அவிவிருத்தி அடைந்து வரும் மூன்றாவது மண்டல நாடுகளில் சுமார் 3 – 4 இலட்சம் குழந்தைகள் போஷாக்குக் குறைவினாலும், தொற்று நோய்களினாலும் உயிரிழக்கின்றனர். மேலும் பல இலட்சக்கணக்கான பிள்ளைகள், வறுமை, பற்றுக்குறை காரணமாக போதிய உடல் – உள வளர்ச்சி பெறுமலும் தாம் பிறந்த குடும்பத்திற்கோ, வாழும்சமூகத்திற்கோ, எவ்வித வளமோ, முன்னேற்றமோ ஏற்படுத்த முடியாத சுமைகளாக வாழ்கின்றனர்.

உலகத்தில் இன்று இதைவிட பாரதூரமான பிரச்சனை கிடையாது. இத்தகைய மானுடப்பிரச்சனைகளுக்கு புதிய புதிய தீர்வுகளைக்காண, தற்போதைய காலகட்டத்தில் போதிய வசதி வாய்ப்புகள் இல்லையென்றும் கூறமுடியாது. இருந்தும் வானமே கூரை வைதரையே படுக்கை என மூலை முடுக்குகளிலும், வீதியோரம் சாலையோரம் வாழ்வோரும், இரவில் வெறும் வயிற்றோடு பசியும் துயரும் மண்டியிட துயில்வோரும், அர்த்தமற்ற போர்களினாலும், போட்டி பொறாமைச் சண்டை சச்சரவுகளினாலும் வாழ்வை நரகமாக்கிக் கொள்வோரும், வாழ்க்கையை சரிவர புரிந்து கொள்ளாத தன்மையினால், அறியாமை, மூடத்தன்மைகளால் வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்வோரும் உலகில் அனந்தம் கோடி. மற்றொரு கோணத்தில் பார்த்தால் நிரம்பிய விஞ்ஞானபூர்வமான

அறிவும், அனுபவரீதியான தகவல்களும் கூட உலகில் நிரம்பவும் உள்ளன. அப்படியிருந்தும் உலகில் முன்னெப்போதும் இருந்திராத அளவில், உள்ளவர்களுக்கும் இல்லாதவர்க்கும் இடையிலான இடைவெளி மிகமிகப் பயங்கரமாக அகலித்துக்கொண்டே போவதேன்? போதியஅறிவும், விளக்கங்களும், வாழ்வியல் உண்மைகளும் அனைவருக்கும் போய்ச்சேராமையும், மேற்படி நிலைமைக்கு ஒரு காரணமென ஏன் சொல்லக்கூடாது?

### அறிவின் பலம்

- விஞ்ஞான பூர்வமான ஒத்திசைவு மனோபாவத்தை ஏற்படுத்துவது அறிவு.
- அறிவின் அடிப்படையில் தான், பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூகத்தலைவர்கள் செயல்ப்பட முடியும்.
- அறிவு பரப்பினால்தான் உலகில் பஞ்சம், பசி, போஷாக்கின்மை, அகால தாய் — சேய் மரணங்கள் போன்றவற்றை ஓரளவிற்கேனும் நீக்கவோ, குறைக்கவோ முடியும்.
- ஆகவே முறையான / போதிய அறிவைப் பெறும் உரிமை, சகல குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்கும் உண்டு.

உலகில் அறிவுச் செல்வம் பிரமாண்டமான அளவில் பல்கிப் பெருக் கொண்டிருக்கிறது. அதே சமயம், அறிவின்மையால் ( அறிவு வறுமையால் ) மானுட சமூகத்தின் பயங்கரமான, படுதுயரமான நிகழ்வுகளும் பெருகிக்கொண்டே போகின்றன. உதாரணத்திற்கு – தவறான பாலூட்டல் பராமரிப்பு முறைகளால் சிசுக்களுக்கு ஏற்படும் வயிற்றோட்டம், மரணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அறிவின்மையைவிட, பயங்கரமானது, ஆபத்தானது – பிழையான, தவறான அறிவு. அறிவுக்கும், நடத்தை அல்லது செயற்பாட்டு மாறுதலுக்கும் இடையில் உள்ள தொடர்பு, மிகசிக்கலானது. ( Complex ). குறிப்பாக, சுகாதார அறிவை ஒரு குறித்த சமூகத்திற்குக் கொடுத்தவுடனேயே, நாம் எதிர்பார்க்கும் செயற்பாடு அல்லது வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பது கஷ்ரம். ஏனெனில் அடிப்படை கல்வியின்மை, வறுமை, பெண்களின் அந்தஸ்தில் உள்ள தாரதம்மியம், பாரிய வர்த்தக நிறுவனங்களின் விளம்பரத்தாக்கம், செல்வாக்கு, மற்றும் போதிய வீட்டு வசதி, தூய குடிநீர் வசதி, பாதுகாப்பான மலசலகூட, வடிகால் வசதிகளின்மை – ஆகிய அனைத்திலும் மக்களின் வாழ்க்கை ஓட்டம் கட்டுப்படுத்துவதை தவிர்ப்பது சிரமமே.

எது எப்படியிருப்பினும், மக்களின் வாழ்க்கை சீரமைக்க, அபிவிருத்தி செய்ய, முன்னேற்ற தேவைப்படும் அறிவை பரவலாக

அளிப்பது, மக்களுக்குச் செய்ய வேண்டிய தார்மீகக் கடமையாகும். தொடர்ச்சியாக கொடுபடும் அறிவு.

1. நாளடைவில் மக்களைச் சிந்திக்க வைக்கும்,

2. தமது பிரச்சனைகளுக்கான காரணங்களை உணரவும் புரியவும் வைக்கும்,

3. அறிவுபூர்வமான சமூகமாக மக்கள் தமது தேவைகளைக் கோர வழி சமைக்கும்.

4. அடிப்படை சேவைகளை ஏற்படுத்தும்போது மக்களின் பங்களிப்பையும் ஈடுபாட்டையும் ஊக்குவிக்கும்.

5. தமது பலத்தில் – திறமையில் மக்கள் நம்பிக்கை கொள்ளத் தூண்டும்.

6.) தமது வாழ்க்கையின் மீது கூடிய ஆதிக்கம் செலுத்தக்கூடிய தகைமையை அறிவு கொடுக்கும்.

இவை அறிவினூல் ஏற்படக் கூடிய நன்மைகள். ஆகவே, அறிவை நிதமும், சரிவர, கூடுதலாக கொடுக்க வேண்டியது அவசியமும் அவசரமுமான கடமை என்பதை உணரலாம். இந்த அறிவைக் கொடுப்பதற்கு பாடசாலை கல்வி முறை – சமூக மட்டத்திலான முறைசாரா கல்வித்திட்டம் ஆகியவற்றோடு வெகுசனத் தகவல் தொடர்புசாதனங்களும் ஒத்திசைவாய் செயல்பட்டால் பலன் மிகச் சிறப்பாக வெற்றிகரமாக அமையும் என்பதை எவராலும் உணர முடியும். இந்த வகையில் பார்க்குமிடத்து வெகுசனத் தொடர்பு ஊடகங்களுக்குள்ள சமூகப் பொறுப்பும், பங்கும், செல்வாக்கும் பாரியது என்பதை மறுக்கமுடியாது. எனினும் வெகுசன ஊடகங்கள் / தகவல் தொடர்பு சாதனங்கள் எந்தளவு தூரம், இத்துறையில் உதவுகின்றன? இவை உங்களால் பதில் பெறப்பட வேண்டிய கேள்விகள்.

வெகுசனத் தகவல் தொடர்பு சாதனங்கள் இன்று பெருமளவில் வர்த்தக ரீதியான நோக்கிலேயே செயல்படுகின்றன. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அனைத்தும் ஓரளவு அரச நிர்வாகக் கட்டுப்பாட்டிலும் தான் இயங்க வேண்டியுள்ளது. இலாப நட்ட நோக்கில் இச்சாதனங்கள் நிர்வகிக்கப்படும் நிலையில், முழுமையான தார்மீக சமூக மேம்பாட்டு நோக்கில், ஆத்மார்த்தமான மானுட நேயத்தோடும் பூரண நேர்மையோடும் செயல்பட முடியாத நிலை ஏற்படுவதை தவிர்ப்பது சிரமமே. உதாரணம் – தாய் முலைப் பாலே சேய்க்கு சிறந்தது / உகந்தது எனும் கருத்தை பரவலாக்கி ஸ்திரப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், புட்டிப்பால் நிறுவனங்களில் அபரிமிதமான விளம்பரங்களை நிறுத்துவதில் / தடுப்பதில் உள்ள பொருளாதார விளைவுகளையிட்டு யோசித்தால் புரியும். மக்களை ஏமாற்றும் போலி, பகட்டு வாழ்க்கை முறை

களை ஊக்குவிக்கும் விளம்பரங்கள், தவறான விழுமியங்களை மக்கள் மன தில் நிறுவும் விளம்பரங்கள்—இப்படி பல சிக்கல்கள் ஆராயப்பட வேண்டியன. "நச்சு இலக்கியம்" என வர்ணிக்கப்படும் சமூக சிந்தனையை சீரழிக்கும், தப்பான அல்லது தேவையற்ற மார்க்கங்களில் இட்டுச் செல்லும் படைப்புகளின் பாதிப்பை யிட்டு வெகுசனத் தகவல் சாதனங் களில் ஈடுபட்டுள்ளோர் அறிவு பூர்வமாக சிந்திப்பதும் செயலாற்று வதும், மானுட மேம்பாட்டிற்கு உதவும்.

வளரும் இளம் பருவத்தின ரிடையே வெகுசனத் தகவல் தொடர்பு சாதனங்கள் அதீதமான ஆதிக்கம் / செல்வாக்கு செலுத்து கின்றன என்பதை மறைப்பது கடி னம். மக்களின் நடையுடை பாவனை, பேச்சு வழக்கு, சிந்தனை ஓட்டம் அனைத்தும், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் தரும் பிரதிமைகளின் பாணியில் உருவாக் கப்படுவதை, சமூக அவதானிப் புள்ளோரால் புரிந்து கொள்வது கஷ்டமல்ல. தற்கால நாகரீகப் போக்கை, வளர்ச்சியை நிர்ணயிக் கும், படிமப்படுத்தும் வல்லமை இவற்றிற்கு (கணிசமாக) உண்டு என்பதால், அவற்றை கையாள் வோரின் பொறுப்புகள் பாரிய பரி மாணம் பெறுகின்றன. வெறும் ஊதியத்திற்காக செய்யப்பட வேண் டிய உத்தியோகமாக இத்துறைசார் தொழில்களை கருதுவது தவறு.

வெகுசனத்தகவல் தொடர்பு சாதனங்கள் பொறுப்புடன் இயங்கி யிருந்தால், எமது வரலாற்றில் எத்தனையோ இடமாற்ற துயர, துன் பியல் நிகழ்வுகளை தடுத்திருக்கலாம் என்பது எனது கணிப்புக் கருத்தும், இதனை மறுக்கும் தைரியம், நேர் மையுள்ள சிந்தனையாளர்களுக்கு வாராது. நீங்களும் உணர்வீர்கள். தீயை, கத்தியைப் போன்றதுதான் வெகுசனத்தொடர்பு ஊடகங் களும், தீயைப் பயன்படுத்தி குளிர் காயலாம், உணவை சமைத்துண்டு மகிழலாம், இருளையகற்றி ஒளி பெறலாம். அதேசமயம் கொலை யும் செய்யலாம், கொள்ளையும் அடிக்கலாம், நாட்டையே எரித்து சாம்பலாக்கலாம், கத்தியும் அப் படியே. வெகுசன ஊடகங்களும் அப்படியே. யார் கையில் அது சேர்கிறதோ, அவரது / அவர்களது நோக்கிற்கு அது பயன்படும். ஆகவே, இத் தகவல் சாதனங்கள் நன்மக்கள் கரம் போன்ற, நற் பணி களுக்கே பயன்பட்டு, நாளை ஒரு நல்லுலகை சமைக்கட்டும் என்பதே, சகலரினதும் இதயபூர்வமான பிரார்த்தனையாகட்டும்.

---

குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெறுபவர்:

செல்வி. ஆனந்தி கார்த்திகேசு,

578, அழுத்தமாவத்தை வீதி, கொழும்பு — 15.

பாராட்டுப் பெறுபவர்:

செல்வன் செ. சூசையா, குருநகர்

செல்வி மேரி அன்றனிற்று (ஜெயா) மணற்குளம், உயிலங்குளம், மன்னார்.

# சமூகத்தில் தொலைக் காட்சியின் தாக்கம்

விஜேந்தினி அமரசிங்கம்
(தயாரிப்பாளர், நடப்பு விவகாரம்,
இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம், கொழும்பு.)

வரலாற்று ரீதியாக:

வரலாற்றுக்காலம் முதலாக சுய வெளிப்படுத்தலும், தொடர்பியலும், கலந்துரையாடலுக்கும், கருத்து முரணபாட்டிற்கும், முரண்வாதங்களுக்கும் கூட ஒரு பொருளாக இருந்து வருகிறது. அத்தகைய கலந்துரையாடல்கள் கூர்மையானவையாக சீர் தூக்குபவையாக, பரவலானவையாக தொடர்பியலில் தொழில் நுட்ப முன்னற்றம் ஏற்படும்போதெல்லாம் இருந்திருக்கிறது. இத்தகைய முன்னேற்றம் மேலும் மேலும் அதிக மக்களுக்கு செய்திகளை எடுத்துச் சென்றாலும் அவை மனிதனதும், அவன் பண்பாட்டுக்கும், மதத்துக்கும், அறநெறிகளுக்கும் பயனுள்ளவையாக அல்லது பாழடிப்பவையாக இருந்தனவா என்று ஆராய்ந்தனர்.

(அ) முதல் தொழில்நுட்ப முன்னேற்றம் மக்களைக் கவர்ந்த கவர்ச்சிகரமான வடிவங்களை அமைத்துக்கொண்டபோது ஏற்பட்டன. பாடல்கள், கதைகள், பக்திப் பாடல்கள், மதபோதனைகள், மத இலக்கியங்கள், வேதங்கள், காவியங்கள் மற்றும் இன்னோரன்னவும் மனிதனிடத்திலும், சமூகத்திலும் செல்வாக்குச் செலுத்த எழுதப்பட்டன. ஓலைச் சுவடிகள், மரச் சுவடிகள், மண் சலாகைகள் என்பனவற்றில் எழுதப்பட்டவற்றிற்கு சமதுணையாக வாய்மொழித் தொடர்புகள் அமைந்தன.

(ஆ) இரண்டாவது பெரிய முன்னேற்றமாக தாளில் அச்சடிப்பது அமைந்தது. அதற்குப் பின் திரைப்படம், தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்றும், கணணி மயப்படுத்தப்பட்ட செய்மதித் தகவலியல் என்றும் வந்துவிட்டது. இது செயற் திறனிலும் பரம்பலிலும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளது.

(இ) அடிக்கடி இது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு மேற்கோள் இதோ.

''புதியவற்றையும், புதிய வளர்ச்சியையும் சமூகத்தினர் சிலர் முறைத்துப் பார்த்தோ முற்றாக எதிர்த்தோ இருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது. அச்சு யந்திரம் முதன் முதலில் புகுத்தப்பட்டபோது ஐரோப்பாவில் ஒரு பெரும் குமுறல் ஏற்பட்டது...... இந்தப் புதிய ''பூதம்'' சமூக அந்தஸ்த்தைக் கவனத்திற் கொள்ளாது எல்லோரும் கலந்துரையாடவும் கருத்துத் தெரிவிக்கவும் இது வழிவகுக்கும் என்று உயர்மட்ட மக்கள் கூறினார்கள்.''

முதன் முதலில் இந்த நாட்டில் வானொலி புகுத்தப்பட்டபோது எமது சமூகமும், பண்பாடும் பாரிய பாதிப்புக்குள்ளாக்கிவிடுமோ என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. இன்று உலக, இலங்கை நாகரீகத்தில் வானொலி இழையோடிய ஒன்றாக இருக்கிறது. தொலைக் காட்சியும் அப்படித்தான்.

## தொலைக்காட்சி பற்றிய அம்சங்கள்

அ) அறிவற்றவை தவறற்றவை என்று சில தத்துவக் கோட்பாடுகளை நம்பிக் கடைப் பிடித்து வருபவர்களிடமிருந்துதான் இந்த அச்சங்களும் விமர்சனங்களும் வருகின்றன. எல்லாத் தத்துவக் கோட்பாடுகளும் காலத்துடன் மாற்றமடைகின்றன என்பதை அவர்கள் உணர்கிறார்கள் இல்லை. கடந்த காலத்தில் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் எப்படி மாற்றங்களைத் தந்தனவோ அப்படியே தொலைக்காட்சியும் மாற்றத்துக் கானஇன்னொரு சாதனமாகும்.

ஆ) ஒவ்வொரு வீட்டையும் ஊடுருவுகிறது என்று தொலைக்காட்சி பற்றி விசேட அச்சம் தெரிவிக்கப் படுகிறது. தொலைக்காட்சிக் கருவியில் கண்களைப் பிணைத்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் குடும்பத்தினர் இருக்கிறார்கள் என்று மக்கள் முறையிடுகிறார்கள். இதனால் வீட்டில் மகிழ்ச்சியாகக் கூடிப் பரஸ்பரம் பேசி, உண்டுகளிக்கும் நிலை அருகி வருவதாகவும் அதனால் தொலைக்காட்சி "பேச்சுக் கொல்லி" என்று வர்ணிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. சமூக உறவு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. உறவினர் நண்பர்களைச் சந்திப்பது தொலைக் காட்சியால் பாதிப்படைவதாகக் குறை கூறப்படுகிறது. கதை சொல்வது முதல் அச்சு யந்திரம் வந்தது போன்ற தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் முதலில் புகுத்தப்பட்டு உலக, தேசிய மட்டங்களை எட்டிய போதும் அவற்றில் தாக்கங்கள் இருக்கத்தான் செய்தன. ஒப்புநோக்கும் போது அவை சிறியவையே. அன்றைய மக்கள் தொகைக்கு அவை போதுமானவையாக இருந்தன. இன்று மக்கள் தொகை அதிகரித்து விட்டது. தொலைக்காட்சி ஒரு தேவையைப் பூர்த்தி செய்கிறது.

இ) அச்சமும் விமர்சனமும் பின் வருவனவற்றைச் சுற்றிச் சுழல்கின்றன. தொலைக்காட்சி குறிப்பாக வர்த்தக சேவை, பாலியல், வன்செயல், சட்டமீறல்கள் போன்றவற்றிற்கு அளவுக்கு மிஞ்சி அழுத்தம் கொடுப்பதாக சொல்லப்படுகின்றது. இதில் ஓரளவு உண்மை உண்டு. ஆனால் இவை இறக்குமதி செய்யப்பட்ட சில ஆங்கிலமொழித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில்தான் அதிகமாக உண்டு. ஆனால் அத்தகைய தொலைக்காட்சிப் படங்களைத் தவிர்க்கவும், குறைக்கவும் உலகளாவிய இயக்கம் ஒன்றுண்டு. ஆனால் தணிக்கையின் மத்தியிலும் "ஆபாச", "பாலியல் சார்ந்த" இலக்கியங்கள் பரவியது போல் தனிப்பட்ட தொலைக்காட்சி நாடாக்களும் பரவத்தான் செய்யும்.

ஈ) சாதாரண தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் நாம் அக்கறை கொண்டுள்ளோம். பாலியல், வன்செயல் என்பவற்றில் நடுநிலைப்போக்கு பண்பாட்டு விழுமியங்களைப் பாதிக்காது சர்ச்சைக்குரிய உத்திகளைக் கொண்ட விடயங்களிலும் தங்கமான நடுநிலைப் போக்கு தொலைக்காட்சியை ஆரோக்கியமான அழகாய் ஆகர்ஷிக்கும் சாதனமாகப் பேண உதவும்.

**தொலைக்காட்சியின் செல்வாக்கு பெரிது.**

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு பொருளடக்கத்திலும், பொலிவேற்றத்திலும், தகவல், கல்வி, மனமகிழ்வு என்ற மூன்று தூண்களில் தங்கி இருக்கிறது. இம்மூன்றில் எது அழுத்தம் பெறுகிறது என்பதை நிகழ்ச்சியின் மூலக் கருத்தே தீர்மானிக்கிறது. அது சமூகத்தின் சேவைகளையும் உண்மையான நிலைப்பாட்டை அனுசரித்து சரிசெய்யப்படுகிறது. நிகழ்ச்சிகள் முழுமையான தகவல்களைத் தந்து, மனமகிழ்வோடு சிந்தனையை முடுக்கிவிட்டு, சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு உதவ வேண்டும். நிகழ்ச்சிகள் ஒரு ஒழுங்குசீர் செய்யப்பட்ட சமூகத்துக்கும், சமூகத்து எதிர்பார்ப்புகளுக்குமிடையில் சமநிலையைக் கடைப்பிடிப்பதுடன் பொதுப் பார்வையாளர்களுக்குத் தேவைப்படும் கவற்சித் தன்மையைப் பேணவேண்டும்.

தொலைக்காட்சி மரபுவழிக் கல்வி நடைமுறைகள் அமைப்புகள் பற்றி மீளாய்வு செய்வதற்கு ஈடற்ற சந்தர்ப்பங்களை வழங்குகிறது. தொழில் நுட்பத்தின் மூலம் கல்விப் பேற்றை விரிவுபடுத்துவதற்கு உதவும் என்ற கருத்து. பாடசாலைகள் கல்லூரிகளுக்கு வெளியே கல்வியைப் பரப்பும் நோக்கை முதலாவதாகக்கொண்டு அமைகிறது. வளர்ந்துவரும் தேவைகளை ஈடுசெய்யமுடியாது எமது நிறுவனங்கள் இருக்கும் நிலையில், எமது நாடுபோன்ற நாடுகளில் இது மிக அவசியம் தேவையாகிறது. இன்றிருக்கும் கல்வி நிறுவனங்களுக்கிடையிலான சமநிலையற்ற தன்மையைக் குறைப்பதற்கான நோக்கோடு இந்தப் புதிய தொடர்பு சாதனம் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

கருத்திற்கொள்ளப்பட்ட அதன் அழிவுத் தன்மைகள் பற்றி விமர்சித்த அறிஞர்களும்கூட மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, குறிப்பாக வளர்முக நாடுகளில், அதற்குரிய பெரும் சாத்தியக் கூறுகளைச் சுட்டிக் காட்டாமல் இல்லை. ●

---

ஆசிரியர்; மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
மாணவன்: தன் இனங்களுக்குள் ஒற்றுமையாய் வாழ்கின்றன. மனிதன் அப்படி இல்லையே அதுதான் ஸேர்.
ஆசிரியர்: ......? அது ஏன் ராமு?
மாணவன்: ஒரு அறிவு கூடியதால் வந்த வினை ஸேர்.
ஆசிரியர்: ......?

"பவானி பவானி...... கூப்பிட்டது காதில ஏறேலயா உனக்கு" அப்பாவின் கடின குரல் அவள் மனதை கல்லாக்கியது போல் உம் என்று இருந்து விட்டாள்.

"இவளுக்கு இப்ப வரவர எதுகும் ஏறுதில்லைத்தான்" தாயின் கண்டிப்பும் மேலும் தாக்கத்தை கொடுத்தது.

"எனம்மா பவானி எழும்பி சாப்பிடன் பிள்ளை, வயதுக்கு வந்த பெரிய பிள்ளை. நீ இப்படி இருந்தா மற்றதுகள் எப்படி சொல்லுக் கேட்கப்போகுது. வா பிள்ளை வா சாப்பிட்டுப் படுபிள்ளை" ஆச்சியின் குரல் ஏதோ ஆறுதல் வார்த்தை போல் இருந்தாலும் அறிவுரை எற்கும் மனநிலை இல்லைத்தான் பவானிக்கு.

"அக்கா அக்கா உங்க பேனையை தாறியாக்கா, அண்ணவுக்கு கடிதம் எழுதிற்று தாறன்"

தங்கையின் எதிர்பார்ப்பும் பவானிக்கு தொல்லை போல்தான் இருந்தது. எதற்கும் முகம் கொடாதவள் போல் படுக்கைக்கு தயாரானாள்.

எல்லோர் முகத்திலும் ஏதோ ஒரு கேள்விக் குறிகள்தான். அப்படி அவள் மாற்றத்தின் காரணம் தான் என்ன? படுக்கையில் புரண்டவள் தூக்கத்தை வரவழைக்க முயன்றும் பயன் இல்லை.

வீட்டிலும் அமைதி இல்லை. எதிர்கால வாழ்விலும் சுபீட்சம் இல்லை. இந்த நிலையில் பிறந்ததினம், புதுச்சட்டை, புதிய சந்திப்பு, புதிய மாற்றம் எல்லாம் போலி வேசம் போல் அவள் மனதைக் குடைந்து எதிர்கால இருள் வாழ்வை எண்ணிக்கலங்கி நின்றாள்.

---

## வாழத்துடிக்கிறாள்

— யோகா

---

வீட்டாரும் அவள் நிலையை புரியாது பலவிதத்தில் சிந்திக்க தொடங்குகின்றனர். முடிவுகள், மருத்துவரை விட மந்திரவாதியின் நூல் கட்டல் தான் நல்லது என முடிவாகிறது.

பரீட்சை முடிந்து முடிவுகள் திருப்தி இல்லை, படித்து முடிப்பதற்குள் பல திட்டங்கள், பதவிகள், வருவாய்கள் என்று எண்ண அவர்களுக்கு பரீட்சை முடிவும் ஒரு தடையாயுள்ளது. மீண்டும் தொடர கௌரவம், தனது வயது ஒத்தவர்கள் மேற்படிப்புக்கு முயல நான் மட்டும் எப்படி. நினைத்துப் பார்க்கவே என்னால் முடியவில்லை.

மன உளைச்சலை யாரிடம் சொல்வது. அடுத்து வருவது பிறந்தநாள். முன்பு போல் புது உடை தரித்து பலரோடும் முன்பு களித்த நினைவுகளை எப்படி மறக்க முடியும் "உடைகள் மாறி தாவணி போட்டால் மட்டும் பெரிய மனுஷி

ஆகிவிட முடியுமா அவள்? படிச்சு கிளிச்சதிலே பிறந்தநாள் கொண்டாட என்ன இருக்கு'' என்ற கிண்டல் பேச்சும் அவள் மனதிற்கு இருளைத்தான் தந்தது.

பள்ளி செல்லும் நாட்களில் துள்ளித்திரியும் சிட்டுப் போன்று கலகலப்போடு திரிந்த வேளை, அம்மா கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்க்கிறாள் பவாணி. ''என் பிள்ளை என்னத்தில் குறைவு; அவள் அழகுக்கும், படிப்பிற்கும் இங்கு யார் இருக்கினம் அவளை அடைய'' என கூறிய வார்த்தைகள் பசுமரத் தாணி போல் அவள் மனதில் பதிந்த நினைவுகள்; ''அவள் டாக்டராக, அல்லது வெளிநாட்டில் பெரிய படிப்புக்கு அனுப்பி, எஞ்சினியர் டொக்டரை பார்க்க வேண்டும். இவளுக்கு இங்கு யார் இருக்கினம் அதுவும் வெளிநாட்டில் தான்'' என பெருமையோடு உறவினருக்கு கூறி மகிழும் அம்மாவின் வார்த்தைகள் அவள் மனதில் உயர்ந்த எண்ணத்தை வளர்த்ததில் தவறில்லைதான்.

ஆண்டுகள் உருண்டோட அவர்கள் வசதிக்கு ஏற்ற வரனைத் தேட முற்பட்ட பெரியோர் அவள் எண்ணத்தை சிதறடிப்பது போன்ற நிலைதான் அவளின் இந்நிலைக்கு காரணம் என எண்ணைத் தவறிவிட்டனர்.

விலைவாசி உயுர்வுபோல் வசதிக்கேற்ற வடிவும், அதற்கேற்ற படிப்பும், அதறகு மேலாக எதிர்பார்க்கும் சீதனச் சந்தையில் போட்டியிட முடியாத பவானி குடும்பத்தில், தாரத்தை பார்த்து தாரத்தை தவறி, இன்று வாழா வெட்டியாக, குடும்ப சுமையாக இருப்பது போல் சிந்திக்க தொடங்கிய நாள்முதல் பவானிக்கு எதுவுமே புதிராகத் தான் இருந்தது. தன்னை தனிமையாக்கி ஒதுங்கி வாழ முற்பட்டாள். தூரத்துப். பார்வை போல் வீட்டாரின் அணுகுமுறையும் அவளை இன்று மந்திரவாதியின் முடிவை எதிர்பார்த்து அவள் வாழ்க்கை உள்ளது.

பவானி குடும்பத்தில் நம்பிக்கைக்கு பாத்திரமான சாத்திரியும் வந்தார். சுற்றும் முற்றும் பார்த்து சுதந்திரமாக கூறுவதற்கு அவர்கள் கூறியவற்றில் அரைகுறை தகவல் எட்டி விட்டது. நம்பரைக் கேட்டு நடு வீட்டில் படையலுடன் தட்சனையும் சேர்த்து இரகசியமாக ஏதோ சொன்னார் பவானியின் தாயாருக்கு ஆறுமாதத்தால் ஒருபடையல். அதுவரை நூலைக் கட்டிவரும்படி கூறிவிட்டார். எல்லா சாத்திரியும் கூறுவது போல் ''இப்போ காலம் சரியில்லை. ஆறுமாதம் பதுநாளில் ஏதோ மாற்றம்'' என்று விட்டான். அது போதும் அவர்கட்கு. அவருக்குத் தொடர்ந்து உழைக்க வேலை வந்த மன அமைதி பவானியும் இந்த வேடிக்கையைப் பார்த்து சிரித்து விட்டாள். அதை கூட சாஸ்திரி தனது திறமைக்குக் கிடைத்த சான்றாக காட்டி விட்டார்.

ஏமாற ஏமாற ஏமாற்ற பலர் தொடர்வது போல் தான் அவளுக் குப் பட்டது.

இனியும் வீட்டில் இருப்பது அவளுக்கு சிறைக்கூடத்தில் வாழும் இன்றைய இளைஞர் நிலை போல் பட்டது. தப்பிக்க தனக்கு ஒரு வேலையைத் தேடினாள். வீட்டாரின் முயற்சியோ மூடச் செயலில் மும்முரமானது. பவானி ஓர் முடிவுக்கு வந்தவளாய் தன்தோழி யை நாடி முதலுதவிப்பயிற்சி பெற சமூகநிறுவனம் ஒன்றுடன் இணைந்தாள். தாதிகள் பயிற்சிக் காலங்களில் நல்ல கருத்துக்கள் பரிமாறப்பட்டதை உணர்ந்தவளின் உள்ளத்திற்கும் முதலுதவி கிடைத் தது. இன்று அவளும் வாழத்துடி க்கிறாள். காரணம் அவள் பணி இன்றையசமூகத்துக்கு தேவையென அவள் உணர்ந்து கொண்டாள்.

எல்லா நோய்களையும் மருந்தால் மட்டும் குணப்படுத்திவிட முடியாது மனம்திறந்த வார்த்தைகளை பரிமாறி ஆறுதல்கூறும் பவானியின் பாணியால் அந்நோயாளர் இல்லமும் இன்று புது மலர்ச்சியில் மிதந்தது.

---

## சிந்தியுங்கள் ...

÷ ✳ ÷

1. அகந்தை என்பது பசி, தாகம், குளிரிலும் கொடியது.
2. விடுதலை என்பது அனுசரித்துப் போதல், மதித்தல், பிறர் உணர்வை, உறவை, இருப்பை மதித்தல்.
3. கோபம் இயலாமையின் வெளிப்பாடு; தாங்கமுடியாதவரும், தாக்க முடியாதவரும், கோபத்திற்கு உட்படுகின்றனர்.
4. மனத்தைத் தவிர குறையுள்ளது இயற்கையில் எதுவும் கிடையாது. அன்பில்லாதவரே ஊனமுற்றவர்.
5. மனிதர்களை சமமாக மதிக்கும் பண்பு போய்விடும்போது, உறவு நிர்ணயமாவதில்லை, அதிகாரமும் ஆணவமும் நிர்ணயமாகிறது.
6. நடைமுறை அன்பு எல்லாவற்றையும் விட வலுவானது; மகத்தானது. இதை எவராலும், எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது.
7. இயற்கையில் மனிதன் தீயவனாகப் பிறப்பதில்லை. சமூகம் அவனைத் தீயவனாக்குகின்றது.
8. தனி மனிதனின் சுதந்திரத்தை மறுப்பதன்மூலம், எந்தச் சமுதாய மும், ஜனநாயகமும் நீடிக்க முடியாது.
9. அழித்து, அழித்து வளர்ந்த மனிதன், அழிவையே சிந்தனையின் முதலிடமாக்கிவிட்டான்.

செல்வி கார்த்திகா பாலச்சந்திரன்
கரவெட்டி.

# மரணிக்காத மனிதத்துவம்

— சாவி

**மனித** வாழ்க்கை என்பது இலகுவானதல்ல பல்வகைப்பட்ட ஏக்கங்களையும், தாக்கங்களையும் கொண்டது. ஒருசிலரின் வாழ்க்கை எரிமலைபோல் வெடித்துப் பூகம்பம்போல் காணப்பட, வேறுசிலரின் வாழ்க்கை வசந்தம் வீசும் சோலையாகக் காணப்படுகிறது. ஒருசிலர் பிறரை வருத்துவதிலே இன்பங்காண வேறுசிலர் பிறரின் நல்வாழ்விற்காகத் தம்மைத் தியாகம் செய்வதிலே இன்பங் காணுகின்றார்கள்.

"உங்கள் இருதயத்தையும், உள்ளத்தையும் பகையிலிருந்து ஏக்கத்திலிருந்து விடுவியுங்கள் — எளிமையாக வாழுங்கள் சிறிது எதிர்பாருங்கள்; அதிகம் கொடுங்கள். அன்பால் உங்கள் வாழ்வை நிரப்புங்கள் ஒளியைப் பிரகாசியுங்கள். மற்றவர்களை நினையுங்கள் ஒரு வாரம் இதனைச் செய்து பாருங்கள் அதிசயப்படுவீர்கள் என்கிறார். ..."

H. G. மற்றேன்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்"

என்கின்றார் திருவள்ளுவர்.

அதாவது பழிக்குப் பழி தின்மைக்குத் தின்மை என்ற சிந்தனையின்றி அவரே தன் செய்கையை உணர்ந்து வெட்கப்படக்கூடியதாக அவருக்கு நன்மை செய்துவிட வேண்டும் என்பதாகும் இதனால் கோப உணர்ச்சி பகைமை உணர்ச்சி இல்லாமல் போக இரக்க உணர்ச்சி உதயமாகின்றது

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக்காட்டு" என்கிறார். கிறீஸ்துநாதர் அதாவது எவராவது எமக்கு அடித்தால் எம்மைத் துன்புறுத்தினால் அதற்குப் பதிலடியாக எமக்கே அவர் தொடர்ந்து அடிக்கும்படி அன்றேல் தொடர்ந்து எம்மைத் துன்புறுத்தும்படி எம்மைக் கையளிப்பதாகும் அதே வேளை அதர்மம் தலைதூக்கும்பொழுது அதற்கு உடந்தையாகப் பேசாதிருங்கள் என்பது பொருளல்ல பிறர் துன்பப்படும்போது நமக்கேன் வீண்வம்பு என்று அவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற மனநிலையில் இருப்பதன்று.

மாருக,

அடிமைப்பட்டு வாழ்வோரின்
விலங்குகளை உடைத்தெறிய
துன்புறுத்தப் படுவோரின்
துயரங்களைக் களைய
சுரண்டப்பட்டு வருந்துவோரை
சுதந்திரமானவர்களாய் மாற்ற
ஏழைகளின் வாழ்வில்
ஏற்றத்தை தோற்றுவிக்க
முயற்சி எடுப்பதே மனித மகத்துவமாகும்.

பண்பட்ட மனிதர்கள் மனிதமனங்களைப் புண்படுத்தமாட்டார்கள் மற்றவர்களது மகிழ்ச்சியை மனதார விரும்புவார்கள். இல்லாமை இல்லாத நிலைவேண்டி கல்லாத மனிதர்களையும் நல்லாக வாழ வைப்பார்கள் அன்போடு இணைந்த அறநெறியிலே அனைவரையும் வாழ வைப்பார்கள்.

"மனமெல்லாம் இனம்புரியாத பூரிப்புத்தரும், உடம்பெல்லாம் ஊறி ஓடுகின்ற நிறைவின் தெளிவான எண்ணம்புரியும் ஏதைக் கண்டாலும் கைகூப்பி வணங்கவேண்டும் என்ற அதிசயமான துடிப்பு எழும், தெம்பு வழங்கும் மோனச்சிரிப்பிலே மோதிக்கிளம்பும், அர்த்த பாவங்களுடன் கண்பார்வையிலே உறவை இழுக்கும் மோகனத்துடன் நளின அசைவிலே காலமெல்லாம் சொல்லத் துடிக்கின்ற பரபரப்புடன் அன்பை, அந்நியொன்னியத்தை. நெருக்கத்தை வெளிக்காட்டும் அன்பு இருவரிடையே மலர்ந்துவிட்டால் அதுபோல் சொர்க்கமும் வேறு இராது'' என்கிருர்

— மகரிஷி

''அன்புக்காகவே அன்பு செலுத்தி வாழவல்ல நல்லவர்கள் எந்த ஊரிலும் ஒருசிலர் இருப்பார்கள் அவர்களுடைய உறவு கிடைத்து விட்டால் போதும் வேறு எதுவும் தேவையில்லை. அவர்களுடைய சூழலில் செத்துமடிவதுதான் மகிழ்ச்சி'

என்று டாக்டர் மு.வரதராசன் 'அல்லி' என்ற நாவலில் கூறுகின்ருர்

மனித ஜீவன்களுக்குத் தனித்துவமான ஒன்று அன்பேயாகும் அன்பே மனிதத்துவத்தின் மரணிக்காத தன்மையாகும். உடல், பொருள், ஆவி அத்தனையும் அழிந்தாலும் உண்மையான அன்பு மனித உள்ளங்களுக்கிடையே மலர்ந்து விட்டால் அதனை எவராலும் அழிக்கமுடியாது. கொடுக்கக் கொடுக்க கூடுவதும், எடுக்க எடுக்க ஊறுவதும் அன்பின் பண்பேயாகும்,

"நீ எனக்கு முன்னே நடந்தால் நான் உன்னை
இழந்துவிடக்கூடும்,
நீ என் பின்னே நடந்தால் நான் உன்னை
மறந்து விடக்கூடும்,
எனவே என் கண்ணே என்னுடன்
சரிசமமாக நடந்துவா"

— ஓர் ஆங்கிலக் கவி

சமத்துவமான முறையிலே மனித மனங்களுக்கிடையே ஏற்படுகின்ற அன்பே மனித சமுதாயத்தின் உயிராகும். ஆண்டான், அடிமை, பெரியோன்- சிறியோன், உயர்ந்தோன்- தாழ்ந்தோன் என்ற பாகுபாடு எதுவுமின்றி வெளிக்காட்டப்படும் அன்பே மனிதத்துவத்தின் புனிதத்துவமாகும்.

"ஒன்றே குலம்
ஒருவனே தெய்வம்"
"அன்பே கடவுள்
அன்பே சிவம்"

என்று சமயங்களின் சித்தாந்தங்களின் ஒற்றுமை காணப்பட "நான் எனதுசாதி, எனதுசமயம், எனதுசமூகம் மட்டும் வாழவேண்டும் ஆட்சி செலுத்தவேண்டும்" என்று பாரபட்சங்களையும், பிரிவினைகளையும் பலப் படுத்தி வருகின்ற சமுதாய அமைப்புகளிலே புனிதத்துவத்தைக் காண முடியாது. சமுதாய நலன்சார் வளர்ச்சி என்பது மனிதநேயம், சமத்துவ, சகோதரத்துவநிலைநோக்கு, மனிதனை மனிதனாய் காண்கின்ற – ஒருவன் எத்தொழிலைச் செய்கின்றான் என்பதைக் காட்டுருவாகக் கொண்டு அவனை மதிப்பீடு செய்யாமல் - அவனை அவனாக, அவளை அவளாக அவனது / ளது இருப்பினைக்கருத்தாகக் கொள்ளும் மனநிலை ஆகிய வற்றில்தான் தங்கியுள்ளது.

---

## கருத்துக் குவியல்: 56

### உங்கள் வாழ்வில், நண்பர்கள் வாழ்வில் சொந்த ஆற்றலால் முன்னேறிய

# "மறக்க முடியாத அனுபவம்"

வாசகர்களுடன் பகிர்ந்து ஆற்றலை வளர்க்க
விரைவாக எழுதுங்கள்.

## சமுதாயம்

வாழ்கை ஒரு பயணம். வான ஊர்தியிலோ, வளமான வாகனத்திலோ குலுங்காமல் சென்று இறங்கும் பயணம் அன்று. கல்லும், முள்ளும், காடும், மேடும் கடந்து செல்லவேண்டிய பயணம். இப் பயணப் பாதை ஏழைகட்கு மட்டும் ஏன் தான் நிரந்தரமான துன்பத்தைக் கொடுக்க வேண்டும். இன்று அதிர்ச்சி தரும் இடைவெளியாக ஏழை — பணக்கார இடைவெளிகள் நீண்டுகொண்டு போகிறது. சமுதாயத்தில் சமத்துவம் எங்கோ ஒரு மூலையில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது. மனிதர்கள் இயந்திரங்கள் அல்ல. அவர்களுக்கும் உணர்வுகள் உண்டு. இதயம் உண்டு. எனவே மென்மையான வர்கள், மேன்மையானவர்கள். மனித உரிமைகள் பறிக்கப்படும் போது அது ஊமையாக இருப்பதில்லை.

## சமத்துவம்

சமுதாயச் சாக்கடைகள்:

சாதியின் பெயரால் சாடப்படும் மக்கள் ஒருபுறம், சீதனத்தின் கொடுமையால் சீரழிக்கப்படும் பெண்ணினம் மறுபுறம். வர்க்க வித்தியாசத்தின் வலைக்குள் அகப்பட்டுத் துடிக்கும் மக்கள் மறுபுறம். குடிசையிலே ஒருநேர உணவுக்காக போராடும் மக்களினம், மாடி வீட்டிலே மிஞ்சிய உணவை தம் செல்லப் பிராணிகளுக்கு உண்ணக் கொடுத்து மகிழும் மக்களினம். அங்கே மாடிவீட்டு யன்னலுக்கு சட்டை தைத்துப் போடும் நிலை! இங்கேயோ குடிசைக்குள்ளே சின்னப் பெண் அம்மணமாயிருக்கும் நிலை!! இது கடந்த கால வரலாறு அல்ல. அல்லது எங்கேயோ நடந்து

## தேடும்

கொண்டிருக்கும் புதினச் செய்தி அல்ல. இதோ இங்கே நம் தமிழர் தெருக்களில் நகரங்களில், கிராமங்களில் நிகழ்கால நிகழ்வுகளாக தொடர்ந்துகொண்டிருக்கும் நிர்ப் பாக்கிய நிலை இது.

சாதிகள் இல்லையடி பாப்பா!

தீண்டாமை மனிதனுக்கும் கடவுளுக்கும் இழைக்கப்படும் துரோகம், மரித்துப்போன மரபுகளையும், சம்பிரதாயங்களையும் கட்டிப்பிடித்துக் கொண்டு குலப்பெருமை பேசுவோர் இன்றும் இருப்பார்களாயின்

தமிழ்நேசன்
யாழ். குருத்துவக் கல்லூரி.

அவர்கள் ஏதோ ஒருவிதத்தில் மன நோயாளிகளே. பிறப்பிலே பேதம் இல்லை. யாவரும் ஒரு குலம். ஒரே இனம். 'அது மனித இனம்' என்பதே. வீதிகளில் வலம் வரும் சாதிப் பேய்களுக்கு சமாதி கட்டுவோம். சரித்திரத்தில் இனி சாதிகள் இல்லையெனச் சாதிப்போம். பிணமாகிக்கொண்டிருக்கும் மனித உரிமைகளுக்கு 'முற்போக்குச் சிந்தனைகள்' என்ற இரத்த தானங்கள் அவசரமானவை, அவசியமானவை.

மங்கையராகப் பிறப்பதற்கே...

ஊமை விழிகளாக உதிரம் வடித்துக்கொண்டிருக்கிறது பெண்மை. சமுதாயத்தின் சமத்துவம்பற்றி சிந்திக்கும் எவரும் பெண்மையின் எழுச்சியை அலட்சியப்படுத்திவிட முடியாது. மனித உரிமைகள் என்று நாணயத்தின் மறுபக்கம் நிட்சயமாகப் பெண் உரிமைதான். பெண்களுக்கான உரிமைகள் இன்றும் எம் மத்தியில் மறுக்கப்படுவது எமது அறியாமையையே அறிவிக்கிறது. விபச்சாரி, மோசமானவள் என்ற வார்த்தைகள் பெண்களுக்குத்தான் உள்ளன. ஒரு ஆண் எப்படி இருந்தாலும் சமுதாயம் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு பெண் கல்யாணச் சந்தையில் விற்கப்பட வேண்டுமென்றால் சிரித்துப் பேசிவிடக்கூடாது. இருக்கும் இடம் தெரியக்கூடாது. பெண் குழந்தை பிறந்தவுடன் அவளை அதிகமாக வெறுக்கின்றனர்.

சீதனக் கொடுமை.

சீதனம் என்னும் சீமெந்தினால் இன்று காதலுக்கு கல்லறை கட்டப்படுகிறது. மாமியார்களே பெண்களின் இந்தக் கொடுமைகளுக்கு உடந்தையாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். வசதி படைத்த பெண்களே பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் பேய்களாவதையும் நாம் காண்கிறோம். "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்று வீடுகளில் பெண்களை முடக்கிவிடுகிறார்கள். சீதனத்தினால் சீரழிக்கப்பட்டு பல பெண்கள் பெருமூச்சு விடுகின்றனர். அவர்கள் சீதனம் என்னும் வேள்விக்குப் பலியாகிக்கொண்டு செத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலை நிறுத்தப்பட சமுதாயம் விளிப்புணர்வு பெறவேண்டும். புதுமைப் பெண்கள் உருவாக வேண்டும்.

எங்களை வாழவிடுங்கள்.

வறுமை எனும அரக்கனின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு இன்று பல்லாயிரம் மக்கள் துடிக்கின்றனர். பட்டினியினாலே தினமும் வேதனைப்படுகின்றனர். நாளாந்த உணவுத் தேடலே அவர்கள் வாழ்வின் குறிக்கோள். தம் உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் பெற்றாலும் கூட, அவ்வூதியத்தைக்கொண்டு வாழ்க்கை வண்டியை நகர்த்த முடியாது தத்தளிக்கின்றனர். ஒரு நேர உணவிற்கே வழி இல்லாமல் சாகாமல் சாகின்றனர். "பணக்காரரிடம் உள்ள பணம் என்பது ஏழைகள் வடித்த கண்ணீர்தான்" அதிர்ச்சி தரும் இடைவெளிகளாக ஏழை — பணக்கார அமைப்புக்கள் பெருகி வருகின்றன. பலருடைய மௌனங்கள்தான் இந்த அமைப்பு முறை வலுப்பெற்றதற்கு காரணங்

களாகிவிடுகின்றன. அந்த மௌனங்கள் தொடரும் என்ற நம்பிக்கையிலேயே அநீதிகள் தொடர்ந்து நடமாடிக்கொண்டிருக்கின்றன. சிந்திப்போம் வாழ விடுவோம்.

**அரசியல் அமைதி வேண்டி ...**

அமைதி இழந்து நிற்கும் இவ்வேளையில் எம் வாழ்வு விரும்பியோ விரும்பாமலோ அரசியலோடு இரண்டறக் கலந்துவிட்டது. மனிதன் தன் உரிமைகளைப் பெற முடியாத நிலையில் வாழ்ந்தாலும் கூட இருக்கின்ற உரிமைகள் மட்டில் அவன் தன் பங்களிப்பை சரியான முறையில் வழங்க வேண்டும். சந்தர்ப்பங்களைப் பாவித்து அரசியல் நெருக்கடி காலங்களில் சந்தர்ப்பவாதியாக மாறிவிடக்கூடாது. உரிமைகளுக்காக போராடும் அதே வேளையில் மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கும் நிலையிலிருந்தும் விடுபடுவோம்.

**மனிதத்துவம் மரணிப்பதா?**

"என்று தணியுமிந்த சுதந்திர தாகம்? என்று மடியும் இந்த அடிமையின் மோகம்?" என்று குரலெழுப்பிய பாரதி இன்னமும் மரணித்துவிடவில்லை. அவன் உறங்கிக் கிடக்கும் உள்ளங்களைத் தட்டியெழுப்பி புத்தி புகட்டுகின்றான். மனிதத்துவத்திற்கு ஏற்பட்டுள்ள மழுங்கடிப்புக்கு விரைவாக தீர்வு காணபபடவேண்டுமாயின் எம் உள்ளங்களில், சமூகப் பார்வையில் மாற்றம் வேண்டும். சிறிய சிறிய சமூக அமைப்புக்களிலே புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். இங்கே மனிதத்துவத்தின் புனிதத்துவத்தை புரியவைக்க வேண்டும்.

"அறிவுகொண்ட மனித உயிர்களை, அடிமையாக்க முயல்பவர் பித்தராம்" என்று சாடும் புரட்சிக் கவி சமூகத்தின் வேற்றுமை விரும்பிகளை வெறுக்கின்றான். மரணித்துக்கொண்டிருக்கும் மனிதத்துவம் காப்பாற்றப்படவேண்டும்.

**இனியொரு விதிசெய்வோம்.**

நீதியில்லா சமுதாயத்தில் பிறந்துவிட்டோம். இதை எப்படியும் மாற்றிவிடுவோம். நீதி கேட்டு நெடிய பயணம் ஒன்றை மேற்கொள்வோம். "தனியொருவனுக்கு உணவில்லையெனின் ஜெகத்தினை அழித்திடுவோம்..." என்ற பாரதியின் உள்ளக் குமுறலை எம தாக்குவோம். வாழத் துடிக்கும் மனித உயிர்களைப்பற்றி சிந்திப்போம். நாம் விழித்தெழுவோம்! எம் சமுதாயத்தின் அவல நிலையை அம்பலப்படுத்தி அடிமை விலங்கை ஒடிப்போம். தினமும் செத்துக்கொண்டிருக்கும் ஏழைகளுக்கு சவப்பெட்டி எடுக்க மட்டும் பணம் கொடுக்கும் பணக்கார வர்க்கத்தை தூக்கி வீசுவோம்.

"ஒன்று படுவோம், போராடுவோம். இழப்பதற்கு ஒன்றுமில்லை பெறுவதற்கோ ஓர் உலகு உண்டு"
(கால் மார்க்ஸ்)

# முதியோருடன் சில மணி நேரங்கள்

சந்தித்தவர்கள்: றெஜஸ்ட், அந்தோனிமுத்து

கொழும்புத்துறை புனித சூசையப்பர் வயோதிபர் இல்லத்துக்குச் சென்று அவர்களோடு சில மணிநேரம் கலந்துரையாடி அவர்களிடமிருந்து பெற்ற அனுபவங்கள் சில. இதோ...!

● நீங்கள் இந்த இல்லத்துக்கு வந்தமைக்குரிய காரணம்என்னவென்று சொல்வீர்களா?

எனது தலைவிதி என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் நான் இங்கு வருவேன் என்று நினைக்கவில்லை. ஆனால் திடீரென என் மனைவி எனக்குமுதல் போய்விட்டாள் இருந்தும் எனக்கு 4 பிள்ளைகள் நல்ல வசதியும் இருந்தது. ஆனால் நான் அவர்களோடு போய் வாழ்வதால் வீணான பிரச்சனைகள் ஏற்பட்டு அவர்களுடைய குடும்பங்கள் பாதிப்படைவதை நான் விரும்பவில்லை அதனால் என் சொந்த விருப்பத்தோடு வந்தன். இங்கும் நான் சந்தோஷமாக வாழ்கின்றேன்.

இது ஒருவருடைய பதில். அங்கே பலர் கூடிக்கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு இதே கேள்வியைக் கேட்டபோது அவர் அளித்த பதில்.

தம்பி மன்னிக்கணும் [கண்களில் கண்ணீர் கசிகின்றது.] எனது மனைவிக்கு 18 வருடங்களாக வருத்தம். என் மகள் தான் பராமரிக்கிறார். அதோட கூட நானும் இருந்தால் இடைஞ்சல் அதிகம் அதுதான் நான்...... இன்னும் தம்பி நான் ஒரு கிறிஸ்தவன். கடைசி காலத்திலயாவது தூய வாழ்க்கை வாழவேண்டும். அதாவது எனக்கு ஞான வாழ்க்கையில் விருப்பம் வந்துவிட்டது. இதற்கு இந்த இல்லம் வசதியாக இருந்தது தம்பி. அத்தோடு களவு, பொய் முதலிய தீய நாட்டங்களை அகற்றவும் உதவுகிறது.

நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு ஒரு முதியவர் கூட்டமொன்று மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டிருந்தது. எங்களைக்கண்டு மிக மகிழ்ந்தார்கள். எங்கள் கைகளைப் பார்த்து சாஸ்திரம் சொன்னார்கள். அவர்கள் சந்தோஷமாக வாழ்கின்றார்கள். என்பதை இச்செயல் எங்களுக்குக் காட்டியது. பகிடிகளுக்கும் குறைவு இல்லை. ஒரு முதியவர் எங்களிடம் வந்து......

தம்பி சுகமா? நான் 67 வயதிலே இங்கு வந்த நான். இப்ப எனக்கு 50 வயது. என் தம்பிக்கு – [அருகில் இருந்த

முதியவர்] 20 வயது. நான் பிறந்தது சிங்கப்பூர். ஒரு கண்டிஷன் என்ன மொழி பேசினேன் என்று மட்டும் கேட்க வேண்டாம். ஏனென்றால் அப்போது எனக்கு 1 வயது.

● ஐயா, இங்கு நீங்கள் தனிமையில் இருப்பதால் ஏதும்...பாதிப்புக்கள்......?

அப்படி ஒன்றும் இல்லை மகனே, நான் வாசிகசாலையில் வேலை பார்த்த போது மாணவர்கள் வா விட்டாலும் தனிமையில் இருந்து புத்தகங்களைப் படிப்பேன். எனக்கு நேரம் போவதே தெரியாது. இப்பவும் நான் தனிமையைப்பற்றி அவ்வளவு அக்கறை செலுத்துவது இல்லை. இங்குள்ளவர்களும் ஒரு போக்கானவர்கள் இதுதான் சிறிய பாதிப்பு. வாசிக்கப் புத்தகங்கள் கிடைப்பதில்லை அதுதான் சிறிய குறைபாடு. ஆனால் சிஸ்டர்ஸ் எங்களோடு அன்பாய்ப் பழகுவதால் தனிமை அவவளவு பெரிதாகத் தெரியாது.

● [இன்னொருவரிடம்] வீட்டில் இருப்பதற்கும் இங்கு இருப்பதற்கும் ஏதாவது வேறுபாடுகள் தெரிகின்றதா?

இல்லாமல் இல்லை தம்பி. வீட்டிலே மனைவி மக்களோடு கஞ்சியோ கூளோ குடித்தால் நலம். இங்கு மனைவி, மக்களைக் காண முடிவதில்லை. ஆனால் உள்ளத்தில் அவர்கள் நினைப்புத்தான்.

● உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஏதும் உண்டா?

எனக்கு உழைக்க வேண்டும் என்ற ஆசை. ஒருநாள் இளைஞனாய் இருந்தபோது யாழ்ப்பாணத்தில் 15 சத வீதமாகப் புகையிலை வேண்டி கொழும்பில் 1.50 சதமாக விற்றேன். நல்ல ஆதாயம் ஆனால்...... வந்த கையோட எல்லாம் கையை விட்டுப் பறந்துவிட்டது.

● உங்களிடம் என்ன கேள்வி கேட்கற்கூடாது என நீங்கள் விரும்புகின்றீர்கள்?

நீ எத்தனையாம் வகுப்புவரைப் படித்தாய் என்று யாரும் என்னிடம் சேட்டிகட் கேட்க முடியாது ஏனென்றால் இந்த முதியவயதிலும் நான் பலவற்றைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கின்றேன். எனவே இப்படியான கேள்விகளைக் கேட்டால் எனக்கு பொல்லாத விஷர் வரும்.

● ஐயா, மறுமலர்ச்சியை நீங்கள் விரும்புகிறீர்களா? அதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

கட்டாயம் நான் விரும்புகின்றேன். இப்போது ஏற்பட்டு வருகின்ற முன்னேற்றங்களைக் கண்டு மகிழ்கின்றேன். மறுமலர்ச்சி அடையாதவனுக்கும், மந்திக்கும் இடைவெளி மிகக் குறுகியது தம்பி. உடன் என்னோடு உள்ள சகோதரர்களோடு நான் மனந்திறந்துகதைக்க மாட்டேன். ஏனென்றால் அவர்கள் புரிந்துணர்வு குறைந்தவர்கள்

கொஞ்சம் படிச்சதை வைச்சு எல்லாம் தெரியும் எண்டுமட்டும் நடிக்காம கற்க இந்த உலகில கனக்க கிடக்கு அதுக்கு வயசு தடையில்லை மனசுதான் தடையாயிருக்கப்படாது.

தம்பி, உன்னோடு கதைத்து பொழுது போக்கணும் என்பதற்காக நான் இவற்றை சொல்லவில்லை. ஆனால் நீ ஒரு இளமையான இருதயம் படைத்தவன். நீ வாழப்போகிறவன். உனது வாழ்க்கையிலும் என் அனுபவங்கள் பயன்பட வேண்டும் என்று தான். உன்னிடம் இவற்றை சொன்னன். [அழுது கொண்டு] தம்பி என்னுடைய பேரப்பிள்ளையாக நினைத்து இவ்வளவு நாளும் ஒளித்து வைத்திருந்ததை எல்லாம் உன்னிடம் சொல்லிட்டேன். ஆனால் இப்போது என் உள்ளத்தில் பெரிய சுமை குறைந்தது போல் உள்ளது தம்பி.

---

## மறுமலர்ச்சி காண்போம்...

புரட்சி பாதையிலே, ஓடிய பாதங்களும்
புதைகுழியில் சிக்குண்டு போனதடா
வரட்சியான செயல்கள் எங்குமே
திரட்சி பெறுவதை, மனிதா! நீயும் பாரடா!
விடுதலை படைப்போம் என்ற கோஷங்கள்
வெறும் வேஷங்கள் ஆனதடா!
சமத்துவம் என்ற கொள்கையும்
சாக்கடையில் சங்கமாய் போனதடா!
மீண்டும் அவலக்குரல்கள் கேட்பதை
மனிதா, நீயும் கேளடா!
கழுத்தறுப்புகள், கருவறுப்புகள் தொடர்வதை
தடுக்க நீயும் விழித்து எழடா!
மறுமலர்ச்சி வேண்டும் எமக்கு
இதில், சந்தேகம் வேண்டாமடா!
புதிய பாதையில் கால்கள் பதிக்கவே
வீறுடன் பொங்கியெழு, மனிதா!

— ச. நிலான்

# உள் மனதில் காயங்கள்

— வீரமகள்

உள் மனதில் காயங்கள்
புலம்புகின்றன,
தோல்விகளின் கனம் நெஞ்சை
அழுத்துகிறது.

காற்றடிக்கும் இடத்தில்
வைக்கப்பட்ட காகிதக்கட்டின்மீது
அது பறக்காமல் இருப்பதற்காக
கல்லைத்தூக்கி வைத்தபின்பும்
காகிதங்கள் பறந்து பறந்து
காட்டுகின்றன.

ஆறுதல்கூறி அடக்கமுயன்றும்
உள் மனதில் நான்குபுறமும்
கிளம்புகின்ற உணர்ச்சிகள்
அடக்கமுடியவில்லை.

எனது தோல்விகளுக்கு நானே
காரணம் என்னும் துணிவுமில்லை
நண்பர்கள் தினமும் கைவிட்டுப்
போகிறார்கள்.

ஆறுதல் கூறவும் ஒருவரில்லை
எனக்கு நானே சொல்லிக்
கொள்ளும்
ஆறுதலும் பலனளிக்கவில்லை.

கடந்த காலங்களை
நோக்கி நான் நடக்கிறேன்.
நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்.

உள் மனதில் காயங்கள்
புலம்புகின்றன — என்
கண்கள் நல்ல பாதையையே
பார்க்கின்றன.

கால்கள்தான்
தடம் மாறிவிடுகின்றன.
பயங்கரமான தனிமை — என்னை
ஆட்கொண்டுவிட்டது.

வறட்சியில் இருந்து மீளும்
பயிர்களைப்போல்
தனிமையில் இருந்து — நான்
மீள மாட்டேனா?
என்மனதை யார் அறிவார்
புதிய காலம் என்னும்
மருத்துவர் — அந்தக்
காயங்களை அகற்றும்வரை
நான்புலம்புவேன்.

*

# மறுமலர்ச் . . சீ?

உடமைகள் குறைந்தன
நடைகள் மாறின
தடைகள் உடைந்தன
விடைகள் பிறந்தன

மடையைப் போலவே
மக்கள் சென்றனர்
"கட்டுப்பாடின்றி"

— சுதா

*

# ஆணினமே புரிந்து கொள்ளட்டும்

[சென்ற இதழில் வெளிவந்த "பெண்ணினமே புரிகிறதா?"
என்ற கவிதைக்கு பதில் கவிதை இதோ]

பெண்ணினத்தைப் பிழை சொல்லி
பேதை நீர் வடித்திருந்த
பெரிய புராணமதைப் படித்தேன்
தக்கபதில் அளித்திடவே துடித்தேன்.

காதலென்றும் கூதலென்றும்
கன்னிப் பெண் பின்னாலே
சுற்றியது உமது முதற்குற்றம் — இங்கு
அவள்தவறு எங்கே உண்டு செப்பும்?

சொர்க்கத்தின் வாசலென்று
சொன்னவர்கள் பேச்சை நம்பி
சுற்றிவிட்டால் கனிந்திடுமோ காதல்?
கேட்டதுமே கொடுத்துவிட
கடைச்சரக்கா? இடைபொருளா?
கவிஞர் புகழ் கொண்ட உண்மைக் காதல்?

அண்ணலவன் நோக்கிவிட
அவளும்தான் நோக்கி நிற்க
அரும்புவது அல்லவோ காதல் — பின்
சுற்றியவன் எல்லோரும்
காதலன்தான் என்றுவிட்டால்
எத்தனைபேர் திரௌபதைகள் மண்ணில்.

கற்பனையில் வாழ்ந்துவிட்டு
மனைவியென மயங்கி நின்று
காதல் மொழிபேசி நின்ற உம்மை
பாதணியால் பேசாமல்
பாவம் என்று விட்டுவிட்டாள்
அதற்கு ஏது (காரணம்) அவளுடைய பெண்மை.

புரிகிறது உம்காதல்
பெண்களுக்குப் புரிகிறது
ஒருதலையாய் காதல்கொண்டு
போதையின்றிப் புலம்பும் நிலை
புரிகிறது பெண்களுக்கு
நன்றாகவே புரிகிறது.

N. விமலா
யாழ்ப்பாணம்.

(உளவியல் தேர்வு)

# நீ ஒரு புதுமை விரும்பியா?

— செபஸ்தி நீக்லஸ் அ. ம. தி.

இன்று புதியனவற்றை, நவீனமயமாக்கல் பட்டவற்றைத் தேடி அலையும் உள்ளங்கள் பல. அவர்களுள் இளம் தலைமுறையினர் கணிசமான பங்கு வகிக்கின்றார்கள் எனக் கூறலாம். ஆகவே இப்புதிய திருப்பங்கள் பற்றி மதிப்பிடுவோமா?

1. புதிய எண்ணங்கள், கருத்துக்கள் பரிமாறப்படும்போது அவற்றை நான் வரவேற்கிறேன் [ ]

2. ஒவ்வொரு முறையும் அறிமுகமாகும் புதுப்புது பொருட்களில் நான் கூடிய கவனத்தைச் செலுத்துபவன் [ ]

3. புதுமை விரும்பி என மற்றவர்கள் என்னை அழைப்பதை நான் விரும்புபவன் [ ]

4. மறுமலர்ச்சி மிக்க புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் நான் ஊக்கமுள்ளவன் [ ]

5. மேற்கு நாடுகளில ஏற்பட்ட நாகரீக வளர்ச்சி எமது மக்களை வலுவாகப் பாதித்துள்ளதெனக் கருதுபவன். [ ]

6. அன்றாட வாழ்வில் நடை, உடை, பாவனையில் மாற்றங்களை மேற்கொள்வோரை எனக்குப் பிடிக்காது [ ]

7. நவநாகரீகம் என்று சொல்லி, புத்தியைப் பாவிக்காமல் வாழ்பவர்களில் நானும் ஒருத்தன் [ ]

8. நவீன யுகம் என்று கூறி போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றவர்களை தடுத்து நல்வழி காட்ட முற்படுபவன. [ ]

9. இயற்கையோடும், அறிவோடும், விஞ்ஞானத்தோடும் ஒத்துப் போகும் வழிகளைக் கையாள்வதில் ஊக்கம் காட்டுபவன்[

---

5, 6, 7, க்கு "இல்லை" என்றும், 1, 2, 3, 4, 8, 9, க்கு "ஆம்" என்றும் குறித்திருப்பீர்களாயின் உங்கள் மன நிலை வளர்ச்சி திருப்திகரமானது. பத்துப் புள்ளியிட்டு 60 க்கு கீழ் நிற்பீர்களென்றால் அதி முயற்சி எடுத்து முன்னேறுங்கள்.

# "சிந்திக்கவும் செயலாற்றவும்"

T. M. அன்ரனிப்பிள்ளை, LL. B.

உமது ஞாபக சக்தி உண்மையிலே பிரமிக்கத்தக்கது! ஆச்சரியமா? பல்லாயிரக்கணக்கான நிகழ்வுகளையும், செய்திகளையும் உமது மனம் சேகரித்து வருகின்றது. ஆயினும், அவற்றைத் தேவைக்கேற்ப நினைவுபடுத்தப் பயிலவேண்டும்.

பின்வரும் முறைகள் பயனுள்ளவையாகும்:—

| | | |
|---|---|---|
| விளங்குதல் | — | குறித்த ஒரு விடயத்தைத் தெளிவாய் விளங்கிக்கொள். |
| ஒன்று சேர்த்தல் | — | பழைய நிகழ்வுகளுடன் புதியனவற்றை இணைக்கப் பழகிக்கொள். |
| தீர்மானித்தல் | — | எவற்றை ஞாபகப்படுத்தவேண்டுமென்பதைத் தீர்மானி. |
| மனக்கண்முன் வைத்தல் | — | நிகழ்வுகளையும் செய்திகளையும் மனத்திரையில் காட்சிகளாய் பதித்துவை. |
| 'சொல்' அமைத்தல் | — | ஒரு 'வார்த்தையை' அல்லது 'வாக்கியத்தை' அல்லது 'சூத்திரத்தை' பயன்படுத்து உதாரணமாக, 'ஏ', 'யா' முதலும், 'ஆ', 'ஓ' ஈற்றும் "எ" இரு வழியும் வினாவாகுமே |
| மீட்டல் | — | ஒரு பெயரையோ அன்றேல் நிகழ்வையோ அடிக்கடி ஞாபகப்படுத்தி மனனம்செய். வெற்றி உனதாகும். |

மறுமலர்ச்சி இல்லாத வாழ்க்கை
மனமகிழ்ச்சி இல்லாததே.

# அழகியல் — ஓர் அறிமுகம்

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

அழகியற் கல்வி என்பது பௌதிகம், இரசாயனம் போன்ற விஞ்ஞான ஆய்வுத்துறை அல்ல. சுவைஞனின் நோக்கு நிலையில் இருந்து, கலைப்படைப்புகளை ஆராயும் முயற்சியே அழகியல்.

சுவைஞனது நோக்கு நிலையானது. அவனது உளநிலை அடிப்படைகளினால் தீர்மானிக்கப்படுவதாகும்.

சுவைஞனது விருப்பு வெறுப்புக்கள், பற்றார்வம், ஆளுமை அவனது சித்தம் என்பன வெல்லாம் அழகியலாய்வில் திர்க்கமான இடத்தைப்பெறுகின்றன.

கலாநிதி. சோ. கிருஷ்ணராஜா உளவியல் அடிப்படையை ஆதாரமாகக்கொண்டு, கலைபற்றியும், கலை நுகர்வு பற்றியும், நவீனகால கலையினை புரிந்துகொள்வது பற்றியும் பல அம்சங்களை விளக்கமுடன் தருகிறார்.

— ஆர்

## அழகியல் என்றால் என்ன?

கலைகளை அனைவரும் விரும்பி ரசிக்கின்றனர். அதற்கு எதுவித கட்டுப்பாடுகளும் இருப்பதில்லை. ஆனால் ரசிக்கப்பட்டதொரு படைப்பு பற்றி ஒருவர் தன் அபிப்பிராயங்களை வெளியிடும்பொழுது, அவ்வபிப்பிராயங்கள் தொடர்பாக கருத்துடன்பாடு எல்லோருக்குமிருப்பதில்லை. கருத்து வேறுபாடுகளும் அது தொடர்பாக எழுகின்ற பிரச்சனைகளுமே அழகியலாய்வின் ஊற்றாகும்.

2. கலையிற் காணப்படும் குறியீடுகள் யாவை? எவ்வாறு இக்குறியீடுகள் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன? கலையில் யதார்த்தம் என்பதன் அர்த்தம் யாது? கலைகள் அனைத்திற்குமான பொதுப் பண்புகள் யாதேனும் உளதா? ''இது ஒரு நல்ல இலக்கியம்'' என ஒருவர் கூறுவதன் மூலம் எதனை உணர்த்த முயலுகிறார்? திருக்கோவையாரில் வெளிப்படும் பௌதீகவதித நோக்கு எத்தகையது? என்பன போன்ற பல்வகை வினாக்களிற்கு அழகியலாளர்கள் விடைதேட முயலுகின்றனர். தரப்படும் விடைகளின் இயல்பிற்கேற்ப பல அழகியற் கொள்கைகள் உருவாகியுள்ளன.

3. அழகியல் எதனைப்பற்றியாராய்கிறது என ஒருவர் வினவுவாராயின், அது கலைப் படைப்புகளைப் பற்றியாராய்கிறதென மிகச் சுருக்க

மாக எம்மால் விடை தருதல் சாத்தியம். ஆனால் அவ்வாய்வுகள் எத் தன்மையது? என மீண்டும் வினவப்படுமாயின், அதற்குச் சுருக்க விடையெதவும் தருதல் இயலாது.

4. கலை - இலக்கியங்கள் பற்றிய வருணனைகளே அழகியலின் பிரச்சனைகள் எனக் கூறுவோமாயின், முதலில் எத்தகைய கூற்றுக்களைப் பற்றிப் பேசுகிறோம் என்பதைத் தெளிவுபடுத்துதல் வேண்டும். மோனாலிசா ஒரு உயிரோட்டமான கலைப்படைப்பென்பதும், மோனாலிசா லியனார்டோ டாவின்சி என்பாரால் வரையப்பட்டதென்பதும், ஒரு கலைப் படைப்பு பற்றிய இரு கூற்றுக்களாயினும், இக் கூற்றுக்களிற்கிடையில் அடிப்படை வேறுபாடுண்டு. மோனாலிசாவை நேரிலே காண்பதன் மூலம் முதலாவது கூற்றின் ஏற்புடைமையை அறிந்துகொள்ளலாம். ஆனால் இரண்டாவது கூற்றின் உண்மையைப் பற்றியறிய அதனையுருவாக்கிய கலைஞனது குறிப்புகளையும், பிற சான்றுகளையும் தேடிப்போதல் வேண்டும். முதலாவது கூற்று ஓவியரசனைபற்றிய கூற்றாகவிருக்க மறுகூற்றோ அக் கலைப் படைப்பின் பௌதிக இருப்பு பற்றிய கூற்றாகவுளது இவை முறையே அழகியலிற்கும், கலை வரலாற்றிற்குமுரிய கூற்றுக்களாகும்.

5. கலைகளின் பௌதீக இருப்புப் பற்றிய கூற்றுக்கள் அழகியலின் ஆய்வுப் பரப்பினுள் உள்ளடங்குவன அல்ல. புலனுகர்ச்சிக்குத் தரப்பட்டது எதுவோ அதுவே அழகியலின் ஆய்வுப் பொருளாகும். அழகியலாய்வின் பொருள் பற்றிய மேற்படி விளக்கம் தெளிவாக உணரப்படாமையினாலேயே, பல பிரச்சனைகள் அழகியலில் தோன்றியுள்ளன.

6. அழகியலின் ஆய்வுப் பொருள் (அ) கலைப் படைப்புகள் பற்றியவை, (ஆ) நுகர்வோனில் கலைப் படைப்புகள் ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியவை என இருவகைப்படும். இவையிரண்டும் புலனுகர்ச்சிக்குத் தரப்பட்ட கலை தோற்றப்பாடு பற்றிய கூற்றுக்களாகும்.

7. நுண்கலைகளில்; கலைகள் பற்றியவை, கலைகள் நுகர்வோனில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியவை, என்ற பாகுபாட்டைத் தெளிவாக இனம் கண்டு கொள்ளலாம். ஓவியம் ஒன்றின் புலனுகர்விற்குத் தரப்பட்ட தோற்றப்பாட்டைப் பற்றிப் பேசும்பொழுது; வர்ணங்கள், உருவ ஒழுங்கு போன்ற விபரிப்புகள் வருமிடத்து, அவற்றைக் கலைபற்றிய கூற்றுக்களாக நாம் வரையறுத்துக் கொள்ளலாம். ஆனால் "உயிரோட்டமான ஓவியம்", "நுகர்வோனுக்குக் கிளர்ச்சியூட்டும் தன்மையது." போன்ற விபரிப்புகளை கலைபற்றிய கூற்றுக்களாகக் கருதுதல் ஆகாது. கலைகள் நுகர்வோனில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றிய கூற்றுக்களாக, நுகர்வோனின் உளநிலை சார்ந்த கூற்றுக்களாக அவை இருப்பதை அவதானிக்கலாம்.

8. இலக்கியங்களைப் பொறுத்தவரையில் மேற்குறித்த பாகுபாடு பொருந்தி வராது. ஒரு கவிதையை அல்லது நாவலை வாசிக்கும்பொழுது, அழகியலாளரது கவனம் சுவைஞரிடத்தே அது ஏற்படுத்துகிற உணர்ச்சிகளைப் பற்றியதாக அமைகிறதேயல்லாது, நூலின் பக்கங்களைப் பற்றியோ அல்லது அதிலுள்ள எழுத்துக்களைப் பற்றியோ இருப்பதில்லை.

9. கலை நுகர்வின்போது வாசகனுக்கு ஏற்படுகிற மனப்பதிவுகள் அழகியலிற் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது. மனப்பதிவுகள் பற்றிய ஆய்வில் "உணர்ச்சி" என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப் படுமொன்றாகும். சாதாரண வழக்கில், குறித்த சொல்லை அதிக இடையூறின்றிப் பயன படுத்த முடிகிறது. "நான் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருக்கிறேன். "X இந்த வேலையைச் செய்யத் தகுதியற்றவர் என நான் உணருகிறேன்." என்ற இருகூற்றுக்களிலும் முதலாவதுகூற்று எனது உணர்ச்சியைப் பற்றியதாகவும், இரண்டாவது கூற்றுகுறிப்பிட்டதொரு வேலைக்கு X இன் தகுதிபற்றியதாகவும் இருக்கிறது. ஆனால் அழகியலாய்வில் உணர்ச்சி என்ற பதத்தைப் பயன்படுத்தி விளக்கங்களைத் தரும் பொழுது, உணர்ச்சி என்ற சொல்லின் பல்வேறு கருத்துக்களையும் பிரக்ஞையுடன் அழகியலாளர்கள் கையாழ்வதில்லை. கருத்து மயக்கங்கள் பல ஏற்படுவதற்கு இதுவே காரணமாகிறது.

10. உணர்ச்சி சார்ந்த பதங்களது அர்த்தத்தின் ஒருபகுதி நுகர்வோனின் அனுபவத்துடன் இணைந்ததாகும். உதாரணமாக; கச்சேரி செய்பவரின் ராக ஆலாபர்ணம் எரிச்சலை ஏற்படுத்துகிறதெனின்; அதனுடைய அர்த்தம் நுகர்வோன் அதனாற் துன்பமடைகிறான் என்பதாகும். உணச்சியின் வெளிப்பாடாயமையும் மேற்படி கூற்று இசையின் இயல்பு பற்றி எதுவும் கூறுவதில்லை. இசையில் எரிச்சலை ஏற்படுத்துவது எதுவெனவும் விளக்குவதில்லை.

11. ஒரு கலைப் படைப்பு பற்றிய விமரிசனத்தில் உணர்ச்சிக் கூற்றுக்கள் இடம்பெற்றுள்ளதெனில்; அதன் அர்த்தம், கலை நுகர்வினால் விமரிசகன் பாதிக்கப்பட்டதெவ்வாறு என விபரிக்கிறான் என்பதேயாகும். எந்தளவிற்குத் தெளிவாகவும், விபரமாகவும் அவனால் விபரிக்கக்கூடியதாயிருக்கிறதோ; அதேயளவிற்கு கலையின் இயல்புகளை வெளிக்கொணதல் சாத்தியமாகலாம். ஆனால் இங்குள்ள பிரச்சனை, விமரிசகனது குறிப்பிட்ட விபரிப்பு கலைப்படைப்பு பற்றிய பொருத்தமான விபரிப்பாகுமா என்பதேயாகும்.

12. கலைகள் பற்றிய விபரிப்பில் உணர்ச்சியை வெளியிடும் பதங்கள் இடம் பெறினும், அவற்றை மற்றவர்களால் உணரவும் அறியவும் கூடுமாயின், அவற்றைக் கலைகள் பற்றிய விபரிப்புகளாகவே கருதுதல் வேண்டும்.

13. அழகியற் கூற்றுக்களின் இயல்புபற்றிய ஆய்வின் தொடக்க மாக முதலிற் கலை - இலக்கியங்கள் பற்றிய சமூக - உளவியல் விபரிப்பு களிற்கும், இரசனை சார் விபரிப்புகளிற்குமிடையிலான வேறுபாட்டைச் செய்தல் இன்றியமையாதது. கலையாக்கத்திற்கான சமூக - உளவியற் காரணிகள் அழகியலின் ஆய்வுப் பரப்பினுள் அடங்காது.

14. கலையாக்க காலத்து, கலைஞனது மனோநிலைபற்றிக் கூறப்படு வனவோ, அன்றிக் கலையின் தோற்றத்திற்குரிய சமூக - பொருளாதாரக் காரணிகள் பற்றிக் கூறப்படுவனவோ, கலைப்படைப்பு பற்றிய கூற்றுக் களாகத் தரப்படும்பொழுது பின்வரும் பிரச்சனைகள் எழலாம்.

அ) மேற்படி கூற்றுகள் அழகியற் கூற்றுக்களாகுமா?

ஆ) அவை அழகியற் கூற்றுக்களாயின்; அவற்றின் ஏற்புடமையை எவ்வாறு பரிசோதிக்கலாம்?

15. கலையாக்கத்தின் பொழுது கலைஞனின் உளப்பாங்கு பற்றிய வருணனையே கலையொன்றின் நோக்கமாகத் தரப்படுகிறது. கலைஞன் எதனைச் செய்ய விரும்புகிறான்? எவ்வாறு செய்ய விரும்புகிறான்? படைப் பிற்கான திட்டம் எவ்வாறு உருப்பெற்றது? என்பது போன்ற வினுக் களிற்குத் தரப்படுகிற விடைகள், கலையின் நோக்கம் பற்றிய விளக்கத் தில் உள்ளடங்குகிறது. இவை கலைப்படைப்பைப் புரிந்துகொள்வதற்கு உதவுமென்பதில் ஐயமில்லை. ஆனால் இவற்றை எம்மால் உண்மையில் அறிய முடியுமா என்பதே இங்குள்ள பிரச்சனை. மேலும், கலையொன்றின் இருப்பிற்குக் காரணமாக "ஒரு நோக்கம் உளது" எனக் கூறுவது பௌதீகவதீதப் பிரச்சனையாகும்.

16. கலைப்படைப்பு காரியமாகவும்; கலைஞனின் நோக்கம் காரண மாகவும், அதாவது கலைக்கு ஒரு காரண காரிய விளக்கம் தரப்படு கிறது. இது கலை - இலக்கியம் பற்றிய நிர்ணயவாத நிலைப்பாடாகும். சுயாதீன சித்தத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் நிர்ணயவாதக் கலைக் கோட் பாட்டை நிராகரிப்பர். இவர்களது அபிப்பிராயப்படி எல்லாக் கலைகளும் கலைஞனது "உடனடி உணர்ச்சியின்" வெளிப்பாடாக உளது.

17. கலைகளின் தோற்றத்திற்கான சமூக - பொருளாதாரக் காரணி கள் பற்றிய ஆய்வுகள் அழகியலாய்வுகளாக மாட்டாது. மாறாக அவை கலைபற்றிய சமூகவியல் ஆய்வுகளாகவும், பொருளாதார ஆய்வுகளாகவுமே இருக்கும். எத்தகைய அரசியற் சூழ்நிலையில் குறிப்பிட்டதொரு கலைப்படைப்பு தோன்றியது? ஒரு கலைப்படைப்பின் தோற்றத்திற்கான வரலாற்று நிர்ப்பந்தங்கள் யாவை? கலை - இலக்கியங்கள் சமூகத்தில் எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுளது? எனப் பல ஆய்வுகள்

தோன்றியுள்ளன. எனினும், இவ்வாய்வுகள் கலை – இலக்கியங்கள் பற்றிய அழகியலாய்வுகளாக மாட்டாது. அழகியலாய்வில் சமூக – பொருளாதார, அடிப்படைகளைத் தேடுவதும் இன்றியமையா தொன்றல்ல.

18. கலையொன்றின் பூரணவிளக்கத்திற்கு கலைஞனின் நோக்கத்தை யறிதல் வேண்டுமென்பது "நோக்கப் போலி" என அழைக்கப்படும். நோக்கப்போலியின் தன்மையை அவைக்காற்றுக் கலையை அடிப்படை யாகக் கொண்டு விளக்கலாம்.

19. நாடகப் பிரதிகளிலும், இசைக்கோவைகளிலும் அவை எவ்வாறு நிகழ்த்தப்படவேண்டுமென்ற குறிப்புகள் இருப்பதுண்டு. ஆனால் இத் தயாரிப்புக் குறிப்புகள் நிகழ்சித்தயாரிப்பிற்கான வழி காட்டல் மட்டுமேயாகும். நாடகம் தயாரிப்பதில் எழுகிற பிரச்சனை கள் அனைத்திற்குமான தீர்வுகளை அவை கொண்டுளதென்றோ, அல்லது இசை நிகழ்ச்சித் தயாரிப்பிற்கான குறிப்புக்கள் அனைத்தும் அவற்றில் உள்ளடங்கியிருக்கிறதெனவோ கூறமுடியாது. பாக் (1685 — 1750) என்ற இசைக்கலைஞன் தயாரித்த பல்லோசை உருப்படிகளிற்கு எத்தகைய கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என ஒருபொழுதும் குறிப்பிடவில்லை. மொஸாத்தின் இசைக்கோவைகளை அவைக்காற்ற முற்பட்டோர் வித்தி யாசமான வடிவங்களில் அதை வெளியிட்டுள்ளனர். ப்ருக்னரின் இசைக் கோவைக்கான (Minor Sympheny, No. 8) மூலப் பிரதி 1887 தயா ரிக்கப்பட்டது. 1890ல் இதற்கொரு புதிய மாதிரி தரப்பட்டது. மீண்டும் 1892ல் பிறிதொரு மாதிரி தரப்பட்டது.

மேலே தரப்பட்ட உதாரணங்களை அடிப்படையாகக்கொண்டு எடுத் துக்காட்டப்படுவது பின்வருமாறு, ஒரு இசைக் கச்சேரியை அவைக்காற்ற முற்படும்பொழுது, கச்சேரிக்கான இசைக் கோவையை யாத் தவன், அது எவ்வாறு அவைக்காற்றப்பட வேண்டுமெனக் கருதுகிறானோ, அவ்வாறே அதனை அவைக்காற்றுதல் வேண்டுமா என்பதாகும் இசை மேதை கள் தமது இசைக் கோவைகள் எவ்வாறு அவைக்காற்றப்படல் வேண்டு மென்ற தெளிவான குறிப்புகளை எல்லாவிடத்தும் தருவதில்லை. நோக்கற் கொள்கையினரின் அபிபிராயப்படி குறிப்புக்களைத் தராமை குற்றமாகும். ஒரு இசைக்கோவையை யாத்தவர், அது எவ்வாறு அவைக்காற்றப்படல் வேண்டுமென்ற குறிப்புகள் எதனையும் தராதவிடத்து, அவைகாற்று பவன் தன் அனுபவத்திற்கும், அறிவிற்கும் எட்டிய வகையிற் செயற் படுவான். இசைக்கோவைக்குப் பொருத்தமான முறையிற் கச்சேரி செய்வதன் மூலம் அவைக்காற்றுபவன் திறமை வெளிப்படும்.

20. நாடகத்திலும் மேற்கூறியவாறான நிலைமையே காணப்படு கிறது. நாடகம் ஒரு குழுக்கலை (Group art) ஆகும். நெறியாளர்,

நடிகர்கள் உதவியாளர்கள், பார்வையாளர்கள் உட்பட அனைவருக்குமே ஒரு நாடக மேடையேற்றத்தில் பங்களிப்புண்டு. நாடகத்தில் நாடக வாக்கம் பற்றிய ஆசிரியரின் குறிப்புகள் எத்தகைய அதிமுக்கியத்து வமும் பெறுவதில்லை ஒத்திகைகள் மூலம் நாடகங்கள் மீள்படைப் பாக்கம் செயப்படுகின்றன.

21. நாடக ஆசிரியர்களாலும், இசைக்கோவை யாப்பவர்களி னாலும் அவை எவ்வாறு? அவைக்காற்றப்பட வேண்டுமென்ற குறிப்புக் கள் தரப்பட்டாலும், அக்குறிப்புகள் அனைத்தையும் நிகழ்ச்சித் தயாரிப் பாளர்கள் கட்டாயமாக மேற்கொள்ளுதல் அவசியமானதொன்றல்ல, அதேபோல இசை நிகழ்ச்சி, நாடகம் என்பன பற்றிய விமரிசனத்திற் கும் ஆசிரிய குறிப்புகள் அதிகம் உதவுவதில்லை. நாடகமும் அதன் பிரதியும், இசையும் இசைக்கோவையும் கலைகள் என்றளவில் தனித்துவ மானவை. ஒன்றைச் சார்ந்து மற்றது விளக்கப்பட வேண்டியதில்லை. மேலும் அக் கலைகள் பற்றிய மேலதிக தகவல்களை அவை தருவதுமில்லை.

இசைக் கச்சேரி, நாடகம் என்பன பற்றிய விமரிசனத்திற்கு இசைக் கோவை யாத்தவருடையதும், நாடக ஆசிரியரதும் குறிப்புக்கள் இன்றி யமையாதனவல்ல எனக் கூறுவதிலிருந்து, இசைக்கோவைகள் நாடகப் பிரதிகள் என்பன பற்றிய ஆய்வுகளே தேவையற்றன என்ற முடிபிற்கு வருதலாகாது. உதாரணமாக நாட்டார் இசையைப் பதிவு செய்பவர்கள் அவ்விசையானது என்னவிதமாகப் பாடப்படுகிறதென்பது பற்றிய குறிப் புக்களைத் தருவர். நாட்டார் இசை பாடப்படக்கூடிய தாளலயங்கள் பற்றிக் கவனம் செலுத்துவது தவறானதென்று கூறமுடியாது. நாட்டார் இசையைப் பேணும் இத்தகைய முயற்சிகளில் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது நாட்டார் இசை ஒரு கலையென்பதற்காகப் பேணப்படுவதில்லை. ஒரு காலத்தில் அவை எமது கலையின் கூறுகளாக இருந்தன. பண்டைப் பண்பாட்டின் ஓர் அம்சமாக விளங்கின என்ப தனாலேயே அவை பேணப்படுகின்றன.

### அழகியலனுபவம்

22. கலைகள் உருவத்தாலும், பண்பாலும் நுகர்வோனது கவனத் தைத் தம்பால் ஈர்க்கவல்லனவாயுள என்பது உண்மையேயெனினும், எத்தகைய இயல்புகளால் நுகர்வோன் இவ்வாறு கவரப்படுகிறான் என விபரிப்பது இலகுவானதல்ல. அதிக முயற்சியின்றி, அழகியல் ரசனை யைத் தரும் கலைகளை ஏனைய பிறவற்றிலிருந்து எம்மால் பிரித்தறியக் கூடியதாயிருக்கிறது. கலைகள் தரும் அனுபவம் அழகானதெனபதால் அழகை அடிப்படையாகக் கொண்டு கலைகளை எம்மால் இனங்கண்டு கொள்ளக் கூடியதாயிருக்கிறதென எமது பிரிப்பிற்கு விளக்கம் தருதல்

கூடும். ஆனால் அழகை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கலைகள் பற்றிய மதிப்பீட்டைச் செய்வது சார்பற்றதொரு முயற்சியல்ல. பெரும்பாலும் அழகானது, அழகற்றது என்ற மதிப்பீடுகள் நுகர்வோனது விருப்பு வெறுப்புக்களை வெளியிடுவனவாகக் காணப்படுகின்றன. சில சமயங்களில், கலைகளை இன்னதென வரையறை செய்யும் ஒரு முயற்சியின் வெளிப்பாடாக அதாவது அழகை கலைகளிற்குரியதொரு குணதிசயமெனக் கொண்டு கலைகளின் இயல்பைத் தெளிவுபடுத்த முயலினும், அம்முயற்சியும் கூட அதிக வெற்றியைத்தராது. 'அது அழகானது' என்ற தீர்ப்பிலிருந்து குறித்த கலையொன்றின் இயல்பு பற்றித் தருக்கரீதியாக எதுவும் அனுமானிக்க முடியாது.

23. ஒருவர் கலைப்படைப்பொன்றைக் குறித்து; "அது ரசிக்கக் கூடியதாயிருக்கிறது" "கலைநியமப்பண்பு வாய்ந்தது" எனக் கூறுகிறார் எனக் கொண்டால், அக் கூற்றுக்கள் "அது அழகானது" என்ற கூற்றிலும் பார்க்க, ஏதோவொரு வகையிற் கூடியளவிற்கு கலையை வரையறுக்க முயலுகிற கூற்றுக்கள் போலத் தோன்றுகிறது. கலைக்குரிய ஏதோ ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவதாக அல்லது ஒரு குறிப்பிட்ட வகையான காட்சிப் புலத்திற்குரிய கூற்றுக்களாக மேற்படி கூற்றுக்களைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் பிறிதொருவர் ரசிக்கக் கூடியதாயிருக்கிறது. கலை நியமப்பண்பு வாய்ந்தது போன்ற கூற்றுக்கள் குறித்த கலை பற்றிய உமது அபிப்பிராயமே ஒளிய, "எனக்கு அவ்வாறு தோன்றவில்லை" என வாதிட முயலுவாராயின், மேற்படி கூற்றுக்களினடிப்படையில் கலையின் இயல்பை வரையறுக்கும் முயற்சி தோல்வியில் முடிவடையலாம்.

24. விஞ்ஞானத் துறைகளில் நடைபெறும் ஆராச்சிகள் சார்பற்ற தன்மை உடையன. துருபதன் என்ற அரசனை வானத்தில் நட்சத்திரமாக நிலைநிறுத்தியதுபோல, மேலே எறியப்பட்ட பொருட்கள் கீழே விழுவது எமது விருப்பு வெறுப்புக்களிற் தங்கியிருக்கவில்லை. கலை – அழகியலில் சார்பற்ற ஆய்வை மேற்கொள்ள முடிவதில்லை. கணிதம், பௌதிகம், பொருளாதாரம் பற்றிய உரையாடல்களில், உரையாடுபவர்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகம் எழுவதில்லை. அவ்வாறில்லாது கருத்து வேறுபாடுகள் ஏதாவது எழினும், அவ்வேறுபாடுகளை தருக்க ரீதியாக விளக்குதலும் கூடும். மேலும் இக்கருத்து வேறுபாடுகள் அவை சார்ந்த விஞ்ஞானங்களின் தற்சார்பற்ற தன்மையை நிராகரிப்பதுவுமில்லை. ஆனால் கலை, அழகியலிலோ மேற்குறித்த சாதகமான நிலைமைகள் காணப்படுவதில்லை. கருத்து வேறுபாடுகள் அதிகம் மலிந்ததொரு துறையாக அது உளது.

25. கருத்து வேறுபாடுகளிற்கான காரணமென்ன? கணிதம், பௌதிகம், பொருளாதாரம் போன்ற ஆய்வுத் துறைகளில் காணப்படாத, கலை – அழகியலிற்கு மட்டுமேயுரிய பிரத்தியோக பண்புகள் யாவை?

26. கலை தரும் அனுபவம் அழகியலிற்குரியது. அது காட்சியை அடிப்படையாகக் கொண்டது. காட்சியில் இரு வகையுண்டு. கலைநுகர் காட்சி சாதாரணக் காட்சியிலிருந்து வேறுபட்டது. கலைநுகர் காட்சியில் கலைப்பொருட்களைக் காண்பதுடன் மட்டும் நாம் நின்று விடுவதில்லை. அவற்றை ரசிக்கவும், மதிப்பிடவும் முயலுகிறோம். அழகியலாய்வின் முக்கிய பிரச்சனை கலைநுகர்காட்சி இன்னது என இனங் கண்டு கொள்வதும், அதனைப் புரிந்து கொள்ள முயலுவதுமாகும். இதனைத் தெளிவு படுத்துமுகமாக, காட்சி பற்றியும், காட்சியுடன் புலனுணர்வு உணர்ச்சி என்பன கொண்டுள்ள தொடர்பு பற்றியும் அறிதல் வேண்டும். புலனுணர்வுகளும், உணர்ச்சகளும் உளத்தோடும் சிந்தனையோடும் நெருங்கிய தொடர்புடையன.

27. சிந்தனை அகவயமானதும், பிரத்தியோக தன்மையுடையது மாகும். சிந்தனையுடன் ஒப்பிடுகையில் புலனுணர்ச்சிகள் அகவயத் தன்மை, பிரத்தியோகத்தன்மை குறைந்தவை. ஒருவர் எத்தகைய புலனுணர்ச்சிகளைப் பெறுகிறார் எனக் கூறுவது சுலபம், ஆனால் அவர் எதனைப்பற்றிச் சிந்திக்கிறார் என அனுமானிப்பது கஷ்டம். புலனுகர்ச்சி பொருளின அவதானிக்கக் கூடிய பண்புகளுடன் தொடர்புடையது. பொருளின் அவதானிக்கக் கூடிய. பண்புகளிற்கும் புலனுணர்விற்குமிடை யிலான தொடர்பை இருமைவாதம் விளக்குகிறது.

28. பொருட்கள் காலம், வெளி என்ற வரையறையுள் அவதானிக் கக் கூடிய பண்புகளைப் பெற்றுள்ளதெனறும், மனித உளம் புலன்கள் வாயிலாக பொருளின் அப் பண்புகளை அறிந்து கொள்கிறதென்றும் இருமைவாதம் விளக்குகிறது. இவ்விளக்கத்தின்படி விஞ்ஞானம் உட்பட அனைத்து அறிவும் விடயித் தன்மையானது. அறிவின் இயல்பு பற்றிய விடயிவாத விளக்கம் மெய்யியலாளர்களின் பலத்த கண்டனங் களிற்குள்ளான பொழுதும், அழகியல் அனுபவம் பற்றிய பிரச்சனைகளை இலகுவில் தீர்த்து விடுகிறதென பொதுவாக வாதிடப் படுவதுண்டு.

29. கலை – அழகியலாய்வுகளில் எழுகின்ற பல்வகைத்தான சிக்கல் களும் மனிதரின் பற்றுநிலையினால் எழுவதாகும். மனித விருப்பு, வெறுப் புக்கள் அழகியல் விழுமியங்களில் கருத்து மயக்கங்களை ஏற்படுத்து கின்றன என ஐ. ஏ. ரிசசாட் எடுத்துக்காட்டுகிறார். ஐ. ஏ. ரிச்சாட் டின் அபிபிராயப்படி கலையின் இயல்பை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டின், முதலில் அழகியல் அனுபவத்திற்குரிய உளவியற் காரணிகளையும், மனித உளநிலைகளையும் புரிந்துகொள்ளுதல் வேண்டும். அழகியலாய்வில் கலை பற்றிய ஆய்வுகள் முதன்மை பெறுவதில்லை மாறாக, நுகர்வோனின் உளம் பற்றிய அறிவே முதன்மையானதென்பது அவரது கருத்து.

# "நான்" எழுத்தாளர் பட்டறை

கண்ணோட்டம் – செயோன்

மருத்துவன் தன் கடமையில் சற்று அலட்சியமாக செயற்பட்டால் அதன் விளைவால் பல உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றான். இதைவிட வலிமையுள்ளவன் எழுத்தாளன் என்பதை உணரவேண்டும். ஓர் எழுத்தாளன் நல்வழிப்படுத்தவும், உண்மைகளை வெளிக்கொணரவுமே தனது பேனாவை பயன் படுத்த வேண்டும். அதற்கு தனது சிந்தனைகளை வழிப்படுத்தி சமூக முன்னேற்றத்திற்கு பயன் படுத்தும் விதத்தில் பயிற்சியடையவும் கூட்டு முயற்சியில் புதிய சிந்தனைகளை உருவாக்கவுமே இவை போன்ற எழுத்துப் பட்டறைகள் வழி சமைக்க வேண்டும்.

மருத்துவனின் மருந்தை அருந்துபவனுக்குத்தான் பயன் உண்டு. ஆனால் வாசகன் எந்த தரத்திலும் இருப்பான். எத்தனை ஆண்டுகள் சென்ற பின்னும் உங்கள் படைப்பை படிப்பான். வாசகர் பெருகி வரும் காலத்தில் அவனை வழிப்படுத்த விளைய வேண்டும். அதற்காக எழுதப்படும் எழுத்துக்கள் வாழ்க்கைக்கு உதவ வேண்டும். அந்த எழுத்தை படைப்பவனும் அதன்படி வாழ வேண்டும். எழுது முன் சிந்திக்க வேண்டும். எழுதிய பின் சிந்தித்து பயன் இல்லை.

இன்றைய உலகில் எழுத்துலகில் உள்ளவனின் தலையையே விலைபேசுமளவிற்கு எழுத்தின் தாக்கம் உலக நாடுகளின் உறவையே கலக்குகிறது. ஆகவே எழுத்தாளனின் ஆயுதம் பேனாவுக்கு எத்தனை வலியுண்டு என்பதனை உணருங்கள். அந்த வலிமை மிக்கவற்றை நல்வழிக்கு பயன்படுத்த ஏற்படுத்தப் பட்ட எழுத்தாளர் பட்டறையின் நல் முயற்சியால் ''நான்'' வளரும் போது நாம் வாழும் சமுதாயம் நல்வழி நடக்க வழி சமைக்கும்.

நான் என்கின்ற அகங்காரம், அதிகாரம், ஆணவம் இருத்தல் கூடாது. நல்ல ஆளுமை உள்ள நான், நல்ல அறிவுள்ள நான், நல்ல சேவையுடைய நான், நல்ல சிந்தனையுடைய நான் சொல்லும் செயலும் ஒன்றாய் வாழும் நானாக மாறவேண்டும். அந்த வழியில் எமக்கு எல்லாம் தெரியும் என்று இருட்டு உலகில் குருட்டு ஆட்டம் ஆடும் கோமாளியாக இராது நல்லவற்றை நாலு பேருடன் பகிர்ந்து அதில் வெளிவரும் உண்மைகளை உலகுக்குப் படைக்க பொன்னை புடமிட்டு அழகுள்ள ஆபரணங்களாக தீட்டும் பொற்கொல்லர் போல் சொல்லால், செயலால் சமூகத்தை வழிப்படுத்தும் சொற்கொல்லர்களை உருவாக உருவாக்கப்பட்டதே எழுத்தாளர் பட்டறை. இப்பட்டறையை கலாநிதி மௌன குரு மிகவும் கச்சிதமாக நெறிப்படுத்த துணை நின்று எழுத்துலகில்

பல அனுபவங்களை பெற்றவர்கள் தங்கள் அனுபவத்தில் எப்படி எழுதுகிறேன் என்பதை விளக்கவும் பயிற்சியாளர்கள் கேள்விக்கு பயன் உள்ள பதில்கள் புதிய எழுத்தாளர்களின் சிந்தனையை செம்மைப் படுத்த உதவியது. 10ம் திகதி மாலை 4மணிக்கு யாழ் மாநில அ.ம.தி துணை முதல்வர் P.P, பிலிப் அ.ம.தி அடிகளார் மங்கள விளக்கேற்ற 'நான்' ஆசிரியர் வின்சன் பற்றிக் தலைமையுரையுடன் இணை ஆசிரியர் S. டேமியன் அ.ம.தி அடிகள் வரவேற்புரையோடு P.P பிலிப் அடிகளின் ஆசியுரையுடன் பட்டறை ஆரம்ப நிகழ்வு சென்சாள்ஸ் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமானது.

சிறுகதையின் கட்டமைப்பை இலகுவாக புரிய வைத்து சபையோர் சிந்தனைகளையும் பட்டறையின் கட்டமைப்புக்குள் இணைந்து கொண்ட நெறியாளரின் திறமை பயிற்சியாளருக்கு வியப்பாய் இருந்தது. தொடர்ந்தார் மயிலன் கூடலூர் நடராஜன் இலங்கையர் கோனின் "வெள்ளிப்பாதசரம்" கதையினை அவர் சொன்னபாங்கே தனி. சிறுகதைக்குரிய கட்டமைப்பும், அம்சங்களும் அதில் இடம் பெறும் வகையினையும் வகுத்துணர வைத்து விளக்கம் தந்தது பயிற்சியாளருக்கு நன்கு பயனுள்ளதாயமைந்தது.

சிறுகதையின் மொழிப்பிரயோகத்தை பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் விளக்கும் போது குட்டிக் கதை விளக்கமுடன் தனக்கே உரித்தான நகைச்சுவை கலந்த அணுகு முறையில் பாத்திரங்களின் மொழி நடையினை மிக நுணுக்கமாக எழுத்தாளர் கையாள வேண்டியதை விளக்கினார்.

முதுபெரும் எழுத்தாளர் சொக்கன் தொடர்ந்தார். ஒரு பொருளை எவ்வாறு சிறுகதை ஆக்க முடியும் என்பதனை தன் அனுபவ சிதறலுடன் பொருள் பதிய வேண்டிய கருத்துகளை பயிற்சியாளர்கட்குப் புரிய வைத்தார்.

மீண்டும் மயிலன் கூடலூர் நடராஜனது சில அறிவுறுத்தலும் சிறுகதை பயிற்சிக்கான முன்னறிவிப்பினை "கியூடெக்" பயிற்சியகத்தில் இரவு அமர்வின்போது வழங்கினார். தொடர்ந்து பயிற்சியாளர் சிறுகதை எழுதுவதற்கான ஆயத்தமுடன் ஒரு மணி நேரத்தில் 35 பயிற்சியாளர்களின் சிறுகதைகளையும் பெற்றுக் கொண்டு தெரிவான 6 கதைகளை மறுநாட் காலை அறிவிக்கப்பட்டது. இவர்களின் கதை படைப்புக்கள் பயிற்சியில் கிடைத்த வெற்றிக்கு சான்றுயின.

"நான் வாசித்த நூல்களே என்னை மாற்றின; நான் மக்களுடன் பேச விரும்பியதையே எழுதுகிறேன்" என்றார் முன்னணி பெண் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்கள்.

"நான் மனிதனாக இருக்கிறேன் அந்த இருப்பின் அர்த்தத்தை கண்டுபிடிக்கவே எழுதுகிறேன்" என்றார் அலை ஆசிரியர் அ. யேசுராசா அவர்கள்.

சமூகப் பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு எழுத வேண்டும் என்றும் மனிதனின் தீராத துயருக்கு தீர்வு தரும் வகையில் எழுதுக்கள் அமைய வேண்டும்'' என்று கூறினர் தொடர்ந்து எழுதிவரும் பிரபல எழுத்தாளர் செங்கையாழியான் அவர்கள்.

''என்னில் ஏற்படும் தாக்கம் தான் என்னை எழுதத்தூண்டுகிறது'' என்கிறார் ஐடுக்க் கதைகளில் கருத்துசெறிவுடன் எழுதும் சாந்தன் அவர்கள். ''ஓர் உன்னத மானுடனைப்படைக்க எழுத்தில் எம் பங்களிப்பை செய்தல் வேண்டும்'' என்றார், ''தாயகம்'' தாணிகாசலம் அவர்கள்.

''என்னை நான் காதலிக்கிறேன் என்னை நான் அன்புசெய்கின்றேன் அதனால் எழுதுகிறேன்'' என்றார் எல்லோருக்கும் மூத்தவர் எழுத்துலகிலும் தன்னறிவை பதித்தவரான சொக்கன் அவர்கள்.

ஒவ்வொரு எழுத்தாளரின் உரையின் பின்பு பயிற்சியாளர்களின் கலந்துரையாடல் ஐயம் தீரும் மருந்தாய் அமைந்தது.

மாலை நிகழ்ச்சியில் கவிதை பயிற்சியும் அதற்கான விளக்க உரையினையும் மொழியியல்துறை விரிவுரையாளர் எம். ஏ. நு:மான் கவிதையின் கட்டமைப்பினை சுவையாக கூறும் போது ''அனுபவம் தான் கவிதையாகிறது'' என உரைத்தார். நல்லகவிதைகள், அல்லாத கவிதைகளையும் உதாரணம் தந்து நகைச்சுவையுடன் விளக்கினர். விரிவுரையாளர் என். சண்முகலிங்கன் சில கவிதைகளை வாசித்து தாம் காண வாசகர்களுக்கு விளக்கமளித்தார்.

தொடர்ந்து விரிவுரையாளர் என். சண்முகலிங்கன் கவிதையின் மொழியை கையாளுதல் பற்றி குறிப்பிட்டு தவறாக கையாளும் தன்மைக்குசில கவிதைகளை கூறி விளக்கமளித்தார்.

அனுபவத்தை எப்படி கவிதையாக்கிறேன் என அ. யேசுராசாவும் விளக்கத்தோடு கவிதைகள் சிலவற்றை சபைக்கு வாசித்து காட்டினர்.

கவிதை தகவல்கள் கொடுக்கப்பட்டு என். சண்முகலிங்கத்தினல் கவிதை பயிற்சிக்கான முன்னறிவுப்புடன் பயிற்சியாளர் எல்லோரும் கவிதை எழுத தயாராகுயினர். இதில் தெரிவான 5 கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதிநாள் நிகழ்வுகள் ஆரம்பமாகவானொலி எழுத்துக்கள் பற்றி கரவையூர் செல்வம் உரை நிகழ்த்திஞர். வானொலி என்ற ஊடகத்தின் நுட்பங்களை வலியுறுத்திய அவர் அதற்கு எழுதும் முறைகளையும் விளக்கினர். அடுத்து பத்திரிகை எழுத்துக்கள் என்ற தலைப்பில் பேசிய 'முரசொலி' ஆசிரியர் எஸ். திருச்செல்வம் பத்திரிகையின் தொழில் நுட்பங்களை விளக்கி, தாம் எத்தகைய படைப்புக்களை எதிர்பார்க்கின்றோென்றும் கூறினர். பின்னர் எழுத்தாளர்களும் மொழி

யும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் மொழிப் பயன்பாட்டின் அவசியத்தை பல உதாரணங்களுடன் கனதியாக விளக்கினார். எழுத்தாளர்களும், வாசிப்பும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய திருமதி சித்திரலேகா மௌனகுரு சகஎழுத்தாளர்களின் எழுத்துக்களை வாசிப்பதுடன், பரந்துபட்ட அறிவியற் துறைசார் வாசிப்பு எழுத்தாளனின் எழுத்திற்கு கனதியூட்டும் என்றார்.

கருத்தரங்கு முடிவில் பயிற்சியின் போது தெரியப்பட்ட சிறுகதையும், கவிதைகளும் எழுத்தாளர்களினால் வாசிக்கப்பட்டன.

நிகழ்ச்சி முடிந்துசெல்கையில் ஒருவித 'பிரிவு' உணர்வுடனேயே அனைவரும் சென்றனர். செல்கையில் ஒரு முதிர்ந்த எழுத்தாளர் கூறினார்: "இது எங்களுக்கும் பிரயோசனம் தந்த எழுத்தாளப் பட்டறை" என்றார். அப்போது ஓர்குரல் "சுய விளம்பரத்திற்காக கூட்டங்கள் போடாது இப்படி பயன் உள்ள செயல்கள்தான் எதிர் காலத்தில் நின்று நிலைக்கும். விழாக்கள், பேச்சுகளைவிட்டு உருப்படியான செயல்தான் நல்லது என்றார்.

இறுதியாக அரியாலை அமல அன்னை அன்பக சிறுவர் இல்லத்தில் மதியவிருந்து அளிக்கப்பட்டது. எல்லோர் மனதும் ஏதோ உறவில் கலந்த மகிழ்வில் மிகுந்த நினைவுகள் இன்றும் நிலைத்து நிற்கிறது. ❋

---


அறிவுப் பசிக்கு அரிய விருந்து....

இதோ வெளிவருகிறது

"நான்" வெளியீட்டு வரிசையில்

வி. பி. யின்

"80 இல் இருந்து 88 வரை"

கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவின்

"விமர்சன மெய்யியல்"

குறிப்பிட்ட பிரதிகளே பிரசுரமாவதால் ஆவலர்களே,

பிரதிக்கு முந்துங்கள்.

# Wilhelm Wundt
# வில்ஹெல்ம் வுண்ட்

— G. M. செபஸ்தியாம்பிள்ளை M. A.

தற்கால உளவியலின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினைச் செய்தவர்களில் வில்ஹெல்ம் வுண்ட் முக்கிய இடத்தினை வகிக்கிறார். உலகிலேயே முதலாவதாக உளவியல் ஆய்வுகூடத்தை நிறுவிப் பல ஆய்வுகளை மேற்கொண்ட புகழ் இவரையே சாரும்.

ஜேர்மனி நாட்டில்' நெக்காரன் என்ற ஊரில் 1832ல் பிறந்த இவர், கிறீஸ்தவ குருவானவர் ஒருவரின் மாணவனாக ஆரம்பக் கல்வியைப் பயின்று, ரூபின்ஜென் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் கற்று, ஹைடல் பேர்க் பல்கலைக் கழகத்திலும், பேர்லின் பல்கலைக் கழகத்திலும் உடலியற்றுறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். பேர்லின் பல்கலைக் கழகத்தில் மார்க்ஸ் மியுலரின் மாணவனாக இருந்த பெருமையும் இவருக்கு உண்டு.

1857 ல் இருந்து ஹைடல்பேர்க் பல்கலைக் கழகத்தில் உடலியற்றுறையில் விரிவுரையாளராக ஏழு வருடங்கள் கடமையாற்றினார். இத்துறையில் பல நூல்களையும் எழுதி பிரபல்யம் அடைந்து வருகையில் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

1874 இல் லீப்பிக் பல்கலைக் கழக மெய்யியல் துறைப் பேராசிரியர் பதவியை ஏற்று, உளவியற்றுறையில் ஆய்வுகூடம் ஒன்றை அமைத்துப் பரிசோதனைகளை மேற்கொள்ளலானார். இதன் காரணமாக உலகப் புகழ்பெற்று, பல நாட்டு மாணவர்களையும் தம்பால் கவரத் தொடங்கினார். பல உளவியல் நூல்களும், கட்டுரைகளும் எழுதி புலன் உணர்ச்சிக்கு விஞ்ஞான ரீதியான விளக்கம் கொடுத்துள்ளார்.

அவ்விளக்கத்தின் சாராம்சத்தைச் சற்று ஆராய்வோம்.

உளச் செயல் முறைகளை (Mental Process) பகுத்து ஆராய்ந்த வுண்ட், புலன் உணர்ச்சி (Sensation), எண்ணக்கருவாக்கங்கள் (Concepts), புலக்காட்சி (Perception) என்றவாறு விளக்குகின்றார். புலன் உணர்ச்சியின் விருத்தியில் நரம்பு மண்டலத்தினுடைய (Nervous System) பங்கையும் புலன் உறுப்புக்களுடைய (Sense Organs) பங்கையும் விளக்கினார்.

அவர் உள்ளத்தினுடைய பிரதான மூலக்கூறுகளாக புலன்னுணர்ச்சி யையும் உணர்வுகளையும் குறிப்பிட்டார். புலன்னுணர்ச்சிக்கு விளக்கம் தரும்போது, அதன் செறிவு (Intensity), பண்பு (Quality), செயற்படும் கால அளவு (Duration) என்பனவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டு மெனக் கூறுகிறார். இவற்றுடன் தொடர்பான உடற்கூற்று – உளவியல் சார்ந்த பரிசோதனைகளை (Psycho - Physical Experiments) மேற் கொண்டு, இங்கு கூறப்பட்ட பண்புக் கூறுகளின் அடிப்படையில் புலனு ணர்ச்சிகளையும் உணர்வுகளையும் விளக்கினார்.

உணர்வுபற்றி விளக்கம் தருகையில் உணர்வுகளுக்கு மூன்று பரிமாணங்கள் உண்டென்கிறார்.

முதலாவது பரிமாணம் மகிழ்ச்சி / கவலை என்பனவற்றுடன் தொடர் புடையது. மகிழ்ச்சியும், மகிழ்ச்சியற்ற நிலையும் (கவலை) இரு எல்லை களாகும். இவ்விரண்டும் முரண்படு தன்மையைக் கொண்டது.

இரண்டாவது பரிமாணம் அமைதி தொடர்பானது. அதன் எல்லை யில் அமைதியைக் குலைக்கும் உளவிறைப்பு (Tension) காணப்படுகிறது.

மூன்றாவது பரிமாணம் ஓய்வும், ஓய்வைக் குலைக்கும் வியப்பும் (Exeitement) காணப்படுகிறது.

மேற்கூறிய மூன்று நேர் பரிமாணங்களிடையே ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது. அவ்வாறே எதிர் பரிமாணங்களிடையேயும் ஒருவித ஒற்றுமை உண்டு என்கிறார். உதாரணமாக ஒருவருக்கு மகிழ்ச்சி ஏற்படும்போது அமைதியும் ஓய்வும் ஒன்று சேர்ந்து கொள்ளும், அதேபோன்று மகிழ்ச்சியற்ற நிலை ஏற்படும்போது, உள விறைப்பும், ஓய்வைக் குலைக்கும் வியப்பும் ஒன்றுசேர்ந்துகொள்ளும்.

| நேர் பரிமாணங்கள் | | எதிர் பரிமாணங்கள் |
|---|---|---|
| மகிழ்ச்சி (Pleasant) ↓ | → | மகிழ்ச்சியற்ற நிலை (Unpleasant) ↑ |
| அமைதி (Peace) ↓ | → | உள விறைப்பு (Tension) ↑ |
| ஓய்வு (Rest) | → | வியப்பு (Excitement) |

## அட்டைப்படம்

கூட்டுவாழ்வில் சிந்தனைகள் நல்லவையாக முன்னேறியப் பார்வை ஒரே கருத்தோடு செயல்பட்டால் புதிய மறுமலர்ச்சியினை சுதந்திர ஒளியில் காணலாம்.

தனிமையில், சிந்தனைப்பிரிவுகளாக செயல்படுபவனது வாழ்வில் இருள் சூழ்ந்த கவலை நிறைந்த வாழ்வைத்தான் நுகரமுடியும். இக்கருத்தினை தனது கன்னிமுயற்சியாக வரைந்தவர் செல்வி. H. W. கருணை இவர்போன்று எத்தனையோ ஓவியர்கள் எம்மிலும் மறைந்து வாழ்கிறார்கள். அவர்கள் திறமைக்கு நான் துணைநிற்கும். கலைக்கு மொழியில்லை. ஓவியன் மொழி தெரியாதவனுடனும் உறவாடும் அரிய ஆற்றலைப் பெற்றவன். அடுத்த மலரை அலங்கரிக்க உங்கள் ஆற்றலை வரையுங்கள்.

# அறவழியின் அரும்பணி

புதிய உலகம், புதிய சமுதாயம், புதிய சிந்தனையாவும் ஏட்டுச் சுரைக்காயாகவும், மேடைப்பேச்சாகவும் இல்லாது நடைமுறையில் நற்பிரசைகளை உருவாக்குவதில் எதிர்கால சமுதாயத்தை இன்றைய சிறுவர்களால்தான் உருவாக்கமுடியும் என்ற உயரிய நோக்கோடு நல்ல பிரசையை உருவாக்கும் சிற்பிகளை சமுகத்தில் பயிற்றுவித்து சிறுவர் வளர்ச்சியில் அக்கறையுடன் செயல்பட பாலர் பருவத்திலேயே நல்வழிப்படுத்த 40 க்கு மேற்பட்ட சிறுவர் பாடசாலைகளை கிராமரீதியில் அமைத்து பணியினை பலசிரமத்தின் மத்தியில் செயல்ப்படுத்தும் அறவழியின் அரிய பணியினை காணும்போது நல்ல சமூகம் உதிக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

சொல்வீரம்போல் செயல்வீரம் கொண்ட சமூகஸ்தாபனங்களை வளர்க்கவேண்டியதும் காலத்தின் தேவைதான். 'நான்'' ஆய்வரங்கை ஒழுங்குசெய்த அறவழி பாலர்பாடசாலை ஆசிரியர்கள் நிர்வாகிகளுடன் உளத்தாக்கமின்றி வாழ்வது பற்றி 'நான்' ஆசிரியர் ஆய்வுரை அளிக்க 'நான்' வளர்ச்சிபற்றி துணையாசிரியர் யோசப்பாலாவும் பொழுதுபோக்கு வாசனைக்கு எவற்றை தெரிந்து கொள்ளலாம் என ஆலோசனைகளை திசை உதவிஆசிரியர் அ. யேசுராசாவும் கருத்துரை வழங்க நிர்வாகி ஜீவதாஸ் தலைமையில் நடந்த விழாவில் கலந்தோர் சார்பில் பகர்ந்த தர்மினியின் நன்றியுரையுடன் நிறைவோடு அறவழியினரின் ஒன்று கூடல் நல்ல பயன்தரும் நிகழ்வாய் அமைந்தது.

# வாசகர் பூங்கா

### நிதர்சனம் வேண்டும்

''மாறியது நெஞ்சம்'' கதை முற்போக்கான எண்ணத்துடன் மனித உணர்வு, உறவிற்கு மதிப்பளிப்பதாக இல்லை. சமூக விழிப்புணர்வுக்கு, கலை தனது பங்கை நிதர்சனமாகச் செய்வதே முக்கியமான கோட்பாடாகும். அந்நிலையில், இப்படியான சிறுகதைகள் எந்த வர்க்கத்தையும், முற்போக்காக எண்ணவைக்காது, அறியாமையிடம் புகலிடம் தேட உந்து கோலாக இருக்கும்.

''நான்'' பலவீனங்களை, பலப்படுத்தி உதவி செய்யும் ஓர் ''சஞ்சீவி'' இப்படியான தரமுள்ள சஞ்சிகையில், பிற்போக்குத்தனமான கதைகளைப் பிரசுரித்து, பலவீனமுள்ளவர்க்கு, தரமான முற்போக்கான, மனித உணர்வு, உறவுக்கு உட்பட்ட கதைகளை பிரசுரித்து அறியாமையை நீக்க உதவி செய்யவும்.

ச. இராமச்சந்திரன்
கரவெட்டி.

### பாராட்டுக்கள்

தை – மாசி ''நான்'' சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். பொதுவாக அனைத்து அம்சங்களும் பாராட்டுக்குரியவை. குறிப்பாக பயஸ்ரமணன் எழுதிய ''பெண்ணினமே புரிகிறதா?'' என்ற கவிதையின் மூலமாக இவ்வகையான பெண்ணினத்தை புரியவைத்துள்ளார். பாராட்டுக்கள். ''மாறியது நெஞ்சம்'' என்ற சிறுகதை வெகுஜோர் சித்திரா போன்றோர் எம்மில் இருப்பின் அவர்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் வெள்ளை மனம் கொண்ட முகுந்தன்கள் இன்று இருக்கிறார்களா என்பது.........?

ச. பிரபாகரன்
உயிலங்குளம்

''என்றும் தேவை நாலின் சேவை

சோர்வுற்றிருக்கும் மனிதர்களை திருப்திப்படுத்தவும், உறங்கும் உள்ளங்களை தட்டியெழுப்பவும் மனிதன் தன்னை உணர்ந்து சிறந்த முறையில் வாழவும் அறிவைப் பெருக்கி உளம் வளரவும் ''நான்'' மஞ்சரி ஆற்றும் சிறந்த சேவை பாராட்டப்பட வேண்டியதும் தேவைக்குரியதும் என்றால் மிகையாகாது.

மேகலா
மானிப்பாய்.

### கவனத்தில் கொள்ள

தனி நபர் புகழ்ச்சிக்கு இடம் கொடாது, முழுமனித வளர்ச்சிக்கு உங்கள் பணி என்றும் தொடர வாழ்த்தும் நாம், காலம் தாழ்த்துவது நோய்முத்திய பின் மருந்து சாப்பிடுவது போல் ஆகிவிடும் என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

❊

ஜெராட்
எழுவைதீவு

# With Best Compliments of

## SITHRA'S

சகலவிதமான
பாவனைப் பொருட்களையும்
சகாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்

Prop.
P. SATKUNANTHAN
J / Nainativu — 07

சித்திராஸ்
30/1, முள்ளி வீதி,
அரியாலை.

SITHRA'S
Mully - Veethy
ARIYALAI.

'NAAN' Psychology - Magazine

O. M. I. Seminary Colombuthurai


FUL-VUE

See good and look better!

opticians & dental technicians.

50, CLOCK TOWER ROAD.

OPPOSIT WELLINGTON THEATRE

JAFFNA



MORAIS